பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 30 புதன்கிழமை 14.03.2018 கதிர் 129

## அவசரகாலச் சட்டம் நாளையுடன் ரத்து!

கொழும்பு, மார்ச் 14

அவசரகாலச்சட்டம் நாளை வியாழக்கிழமை நள்ளிரவுடன் ரத்தாகும். அதனை நீடிக்கவேண்டிய தேவை அரசுக்கு இல்லை.

– இவ்வாறு தெரிவித்தார் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார.

இது தொடர்பில் அவர் மேலும்

பக்கம் 03 »

## யாழ். வருகிறார் இரா. சம்பந்தன்



யாழ்ப்பாணம், மார்ச் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்

பக்கம் 18 »

# வடக்கில் முன்பள்ளிகளை நடத்தமுடியாது ராணுவம்!

## அவற்றை மாகாண அரசிடம் ஒப்படைக்க சபையில் கோருவர் கூட்டமைப்பு எம்.பிக்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 14

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சகல முன்பள்ளிகளையும், அந்த முன்பள்ளிகளுக்குப் பாதுகாப்பு அமைச்சினால் ஒதுக்கப்படும் நிதியையும் வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் நேற்று மாகாண சபை அமர்வில் தெரிவித்தார்.

பக்கம் 18 »

## வடக்குக் கல்வி அமைச்சரை கதை கூறிக் கடித்தார் பசுபதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் மீது மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுத் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

இதன்போது, கல்வி அமைச்சருக்குச் சொல் புத்தியும் இல்லை, சுய புத்தியும் இல்லை என்ற

பக்கம் 18 »

## இனி இது ரகசியம் அல்ல!

இன்று இப்பத்தியில் கட்சிகள், பிரமுகர்களைக் குடையாமல் நம் மவருக்குப் பிரயோசனமான சில அரசியல் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

பக்கம் 03 »

## இணைத் தலைவர்களால் பல்வேறு இடையூறுகள்!

### மாகாண சபையில் முதல்வர் விசனம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 14

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மாகாண முதலமைச்சர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இணைத்தலைவர்களாக இருப்பது வழக்கம். ஆனால் அரசு தன் நலன்களுக்காகப் பல அரசியல்வாதிகளை

பக்கம் 18 »

## மைத்திரிபால தலைமையில் ஜப்பானில் முதலீட்டு மாநாடு



டோக்கியோ, மார்ச் 14

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் முதலீட்டு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பான முதலீட்டு

பக்கம் 18 »

## சமூக ஊடகத் தடை; ஐ.நாவும் கண்டனம்

நியூயோர்க், மார்ச் 14

இலங்கையில் இணையத் தளங்களுக்குச் சுதந்திரமாகப் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற நாளாந்தச் செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டார் ஐ.நா. பேச்சாளர் ஸ்ரீபன் டுஜெரிக்.

பக்கம் 18 »

## கண்டிக் கலவரத்துக்கு நேற்று யாழில் எதிர்ப்பு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 14

கண்டியில் இடம்பெற்ற இனவாதச் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கண்டன

பக்கம் 03 »

## பேஸ்புக் மீதான தடை நீக்கப்படவேண்டும்

### சம்பிக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14

சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளருமான சம்பிக்க

பக்கம் 18 »

## பேஸ்புக் தடை வெள்ளி நீங்கும்!

கொழும்பு, மார்ச் 14

பேஸ்புக் மீதான தடை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நீக்கப்படும் எனத் தொலைத்தொடர்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பேஸ்புக் நிர்வாக அதிகாரிகளுடன் நாளை வியாழக்கிழமை கொழும்பில் பேச்சு நடத்தப்படும்.

அதன் பின்னரே பேஸ்புக் மீதான தடை நீக்கப்படும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (ஐ)

## சிலாபம் மீனவர்கள் மூவர் முல்லைக் கடலில் மாயம்!

### படகையும் காணவில்லை

முல்லைத்தீவு, மார்ச் 14

முல்லைத்தீவு - நாயாறுப் பகுதியில் தொழிலுக்குச் சென்ற சிலாபம் மீனவர்கள் மூவர் இதுவரை கரை திரும்பவில்லை. இவர்களைத் தேடும் பணியில் சக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.



பக்கம் 18 »

## இலங்கை அரசின் மீது சர்வதேச நடவடிக்கை

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜெனீவாவில் வலியுறுத்தல்

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை

பக்கம் 18 »

காலைக்கதிர் Kalaikkathir



# ஜப்பான் சக்கரவர்த்தி ஜனாதிபதியுடன் சந்திப்பு





கொழும்பு, மார்ச் 14

ஜப்பானுக்கும் இலங்கைக் குமிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் ஜப்பானுக்கு அரசமுறை விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஜப்பான் நாட்டின் சக்கரவர்த்தி அகிஹிதோவுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று முற்பகல் இடம் பெற்றது.

டோக்கியோ நகரிலுள்ள இம்பீரியல் மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதியையும், ஜனாதிபதியின் பாரியார் ஜயந்தி சிறிசேனவையும் ஜப்பான் நாட்டின் சக்கரவர்த்தியும் மிச்சிகோ மகாராணியாரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அதன் பின்னர் இரு தலைவர்களும் சுமுகமாகக் கலந்துரையாடினர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வருகை தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்ட ஜப்பான் சக்கரவர்த்தி, இரு நாடுகளுக்குமிடையில் நீண்டகாலமாக இருந்துவரும் பல மான உறவுகள் இந்த விஜயத்தின் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டுக்கான அரசமுறை பயணத்துக்கு அழைப்பு விடுத்தமைக்காக ஜப்பான் சக்கரவர்த்திக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை அனைத்து வகையிலும் பலப்படுத்துவது தனது எதிர்பார்ப்பாகும் எனத் தெரிவித்தார்.

1981 ஆம் ஆண்டு இலங் கைக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து நினைவு கூர்ந்த ஜப்பான் சக்கரவர்த்தி, அந்த விஜயத்தின்போது கண்டி தலதா மாளிகைக்கு சென்று வழிபடும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்து எனத் தெரிவித்தார்.

அந்த விஜயத்தின்போது இலங்கை மக்கள் தனக்கு வழங்கிய பெருவரவேற்பு குறித்தும் ஜப்பான் சக்கரவர்த்தி கௌர வத்துடன் நினைவு கூர்ந்தார்.

ஜப்பான் இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த சந்தர்ப்பங்களில் உண்மையான நண்பன் என்ற வகையில் இலங்கை ஜப்பானுக்கு வழங்கிய ஒத்துழைப்புகளை நன்றியுடன் நினைவு கூர்ந்த ஜப்பான் சக்கரவர்த்தி, இலங்கைக்கு தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உதவுவதற்குத் தயாராகவுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரி ஜப்பான் சக்கரவர்த்தியுடன் இணைந்து இம்பீரியல் மாளிகையைப் பார்வையிட்டார்.

# ஐ.தே.கவினர் காலை வாரியமையால் பிரேரணையிலிருந்து தப்பினார் ரணில்

கொழும்பு, மார்ச் 14

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்குப் போதிய ஆதரவு கிடைக்காததால், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணி அறிவித் திருந்தது.

கண்டியில் வெடித்த வன்முறைகளை அடுத்து, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதைக்கூட்டு எதிரணி ஒத்திவைத்திருந்தது.

இந்த நிலையில், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் போதிய ஆதரவு கிடைக்காததால்,



அதனைச் சமர்ப்பிப்பதில் இழுபறிகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் இதுபற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் பதிலளிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் எப்போது முன்வைப்பது என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு தமக்கு மேலதிக கால அவகாசம் தேவைப்படுவதாக ஐ.தே.க அரசியல் வாதிகள் பலரும் கூறியுள்ளனர்.

இதனால் எப்போது இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்று தீர்மானிக்கவில்லை.

இது வெற்றியளிக்க வேண்டும் என்பதால், பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதற்குச் சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## வன்முறையைத் தூண்டிய 3 குழுக்கள் குறித்து புலனாய்வுப் பிரிவு விசாரணை

கண்டியில் இடம் பெற்ற வன்முறை சம்பவங்களுடன், அரசியல் கட்சிகள் அடங்கிய 3 குழுக்கள் செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது எனதகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் இலங்கை புலனாய்வுப் பிரிவினர் இரகசிய விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

தற்போதும் இந்த குழுக்களைச் சேர்ந்த பலர் கைதாகி யுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய சில அரசியல் கட்சிகளும் இந்த குழுக்களுடன் இணைந்து செயற்பட்டிருப்பதாக விசாரணைகளில்தெரிய வந்துள்ளது.

## சமூக வலைத்தளங்களை சமூக நலன்களுக்காகப் பயன்படுத்துவது அவசியம்

கொழும்பு, மார்ச் 14

சமூக வலைதளங்களை சமூக நலனுக்காக பயன்படுத்தவேண்டும். எனவே சமூக வலைத் தளங்களை கண்காணிப்பது அவசியமாகிறது.

சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணித்தியாலங்களில் கண்டியில் எதுவித மோதல்களும் அறிவிக்கப்படவில்லை எனறும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# வவுனியா வீட்டுத்திட்டத்திற்கு 3 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு!

வவுனியா, மார்ச் 14

வவுனியா மாவட்டத்தில் வீட்டுத்திட்டத்திற்கு 3 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

வவுனியாவில் வீடமைப் புக்காக 3 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 50 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, 40 மாதிரிக் கிராமங்களே அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தாலும் வவுனியாவிற்கு வருகை தந்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரிடம் மக்கள் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளுக்கமைய மேலும் 10 மாதிரிக் கிராமங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

எனவே,பிரதேசசெயலாளர் காணியை ஒதுக்கீடு செய்து அதற்கான பத்திரங்களுடன் பயனாளிகள் இருப்பார்களேயானால் அவர்களுக்கான திட்டத்தினைச் செயற்படுத்த முடியும் என தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதேச செயலாளர்–

பயனாளிகளை அடையாளங்கண்டு காணிகளை வழங்குவதற்கு எமக்கான சுற்றுநிருபம் தடையாக வுள்ளதால் எம்மால் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு காணியை விடுவிப்புசெய்து கொள்ள முடியாதுள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

(க-100)

# இலங்கை அரசிடம் கால அவகாசம் கோருகின்றது பேஸ்புக் நிறுவனம்

இலங்கை அரசிடம் பேஸ்புக் நிறுவனம் கால அவகாசம் கோரியுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளன.

இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்கள் உள்ள பதிவுகளை நீக்குமாறு இலங்கை அரசாங்கம் பேஸ்புக் நிறுவனத்திடம் விடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் பதிலளிக்கும்போதே பேஸ்புக் நிறுவனம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

சிங்கள மொழிப் பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக இந்தக் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மொழி அறிவு கொண்ட போதுமானளவு பணியாளர்கள் தற்போது தமது நிறுவனத்தில் இல்லை எனவும் பேஸ்புக் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பேஸ்புக் மீதான தடை அரசியல் சார்ந்த விடயம் அல்ல, இனவாதத்தைத் தூண்டும் மற்றும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையான பதிவுகளைத் தொடர்ந்து இடம்பெற அனுமதிக்க முடியாது.

இந்தவிடயத்தில் பேஸ்புக் நிறுவனத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப் படுகின்றன. அந்த நிறுவனம் வழங்கும் உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தடையை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# காணாமற்போனோரின் உறவுகளை சுவிஸ் தூதுவர் நேற்றுச் சந்தித்தார்!



கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமைகள் தொடர்பில் சுவிஸ் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 387 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில சிக்கலான விடயங்களைச் செய்ய வேண்டி நேர்ந்தால் தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்று சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டு தலையை முற்றாக மழித்துக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் போன்றோர் தலையைப் பிய்த்துக் கொள்வதற்குஎன்னசெய்வார்கள் என்று ஹாஸ்யமாகக் கேட்டிருந்தேன்.

இப்போது அந்த வகையறாவில் மற்றொரு அதிகாரி சேர்ந்திருக்கின்றார். அவர் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மா.பற்றிக் டிரஞ்சன்.

ஆளுநர் குரே போல இவருக்கும் தலையில் மயிர் கம்மிதான். ஆனால் தலையைப் பிய்த்துக்கொள்ளும் ஒரு வேலை அவருக்குக் காத்திருக்கின்றது.

அது வடக்கு மாகாணத்தில் தொங்கு நிலையில் சிக்கிக் கொண்டிருக்கின்ற உள்ளூராட்சி சபைகளின் முதல் கூட்டத்தை நடத்தி மேயர், பிரதி மேயர் அல்லது தவிசாளர், உதவித் தவிசாளரைத் தேர்ந்தெடுக்கும் தெரிவை அவர் முன்னெடுக்க வேண்டும்.

வட மாகாணத்தில் ஒரு மாநகர சபை, 5 நகர சபைகள், 28 பிரதேச சபைகள் என 34 உள்ளூராட்சி அமைப்புக்கள் உள்ளன.

இவற்றில் நான்கு சபைகளில் சம்பந்தப்பட்ட கட்சிகள் தனித்துப் பெரும்பான்மை பெற்றுள்ளன. அங்கு அந்தந்தக் கட்சியின் செயலாளர் நியமிப்பவர்களே தவிசாளர், உப தவிசாளர்களாகப் பதவியேற்பர்.

ஏனைய 30 சபைகளினதும் முதலாவது கூட்டத்தைக் கூட்டி உரியவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையை மாகாண உள்ளூராட்சி ஆணையாளரே எடுக்க வேண்டும்.

தெரிவான உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வர்த்தமானியில் பிரசுரமாகி ஒரு வார காலத்துக்குள் சம்பந்தப்பட்ட 34 சபைகளுக்குமான முதல் கூட்டங்களை கூட்டுவதற்கான திகதியையும் நேரத்தையும் இடத்தையும் தெரிவுசெய்து அறிவிப்பது ஆணையாளரின் கடமை.

வர்த்தமானி அறிவிப்பு வெளியாகி ஒரு மாத காலத்துக்குள் அந்த முதலாவது கூட்டத்தை ஆணையாளர் கூட்ட வேண்டும்.

உரிய முன்னறிவித்தல் கொடுத்து அத்தகைய கூட்டத்தைக் கூட்டுவதற்கு அவருக்கு இரண்டு வார கால அவகாசம் தான் கிடைக்கும்.

அதன்படி, அந்த இரண்டு வார காலத்துக்குள் வடக்கு மாகாண ஆணையாளர் 34 சபைகளின் முதல் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

இந்த இரண்டு வார காலத்தில் விடுமுறை நாள்கள் போக அவருக்குப் பத்து நாள்கள் தான் அதற்குக் கிட்டும்.

அப்படியாயின் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு சபைகளின் கூட்டத்தை அவர் கூட்ட வேண்டியிருக்கும். தேவைப்பட்டால் மாலை நேரம் இரவு கடந்தும் அத்தகைய கூட்டங்களைக் கூட்டுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அத்தகைய கூட்டத்துக்கு தெரிவான உறுப்பினர்களில் 50 வீதத்துக்கும் குறையாதோர் சமுகமளிக்க வேண்டும். அதற்குக் குறைவானோர் சமுகமளித்தால் கூட்டத்தை ஒத்திவைத்துப் பிறிதொரு தினத்தில் ஆணையாளர் புதிதாகக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். முதல் கூட்டத்தில் தவிசாளர், உதவி தவிசாளர் அல்லது மேயர், பிரதி மேயர் அல்லது நகரபிதா, பிரதி நகரபிதா தெரிவுகளை ஆணையாளர் முன்னெடுப்பார்.

ஒரு பதவிக்கு ஒருவர் பெயர் மட்டுமே பிரேரிக்கப்பட்டால் தேர்தலின்றி அவர் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார் என ஆணையாளர் அறிவிப்பார்.

ஒன்றுக்கு மேற்பட்டோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டால் ஆணையாளர் அதற்காக தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும்.

அத்தகைய தேர்தலில் பிரசன்னமான உறுப்பினர்களில் எத்தனை பேர் வாக்களிக்கப் போகின்றனர் என்பதை ஆணையாளர் ஒவ்வொருவராகக் கேட்டறிவார். அதன்பின்னர், வாக்களிக்க விரும்புவோரிடம் அவர்கள் இரகசிய வாக்கெடுப்பையா அல்லது பகிரங்க வாக்கெடுப்பையா கோருகின்றார்கள் என்பதை ஒவ்வொருவராகப் பகிரங்கமாக அவர் கேட்டறிவார்.

அப்படி பதிலளிப்போரின் பெரும்பான்மையினரின் முடிவுப்படி அவர் தீர்மானம் எடுப்பார்.

பெரும்பான்மையானோர் இரகசிய வாக்கெடுப்பைக் கோரினால் அவர் இரகசிய வாக்கெடுப்பை வாக்குச் சீட்டுகள் மூலம் நடத்த வேண்டும்.

இரகசிய வாக்கெடுப்பா என்று தீர்மானிக்கும் விவகாரத்தில் வாக்குகள் சமனாக இருக்குமானால் திருவுளச் சீட்டு மூலம் வாக்கெடுப்பை எப்படி நடத்துவது என்பதை ஆணையாளர் முடிவு செய்வார்.

ஒரு பதவிக்கு இரண்டுக்கு மேற்பட்டோரின் பெயர் பிரேரிக்கப்பட்டால் முதல் கட்டத் தேர்தலில் கடைசியாக வருபவரின் பெயரை நீக்கி விட்டு, எஞ்சியோரிடையே அப்பதவிக்கான தேர்தலை நடத்த வேண்டும்.

இப்படி ஒவ்வொரு கட்டத் தேர்தலில் ஒவ்வொருவரைக் குறைத்து வந்து கடைசியாக நேரடியாக இரண்டு பேர் மத்தியில் தேர்தல் நடக்கும் வரை அதனைத் தொடர வேண்டும்.

இரண்டு பேருக்கு இடையிலான தேர்தலில் யார் வெல்லுகின்றாரோ அவரே அப்பதவிக்குத் தெரிவாகியுள்ளார் என உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பார்.

இப்படிச் சிக்கல் நிறைந்த பணியை நிறைவு செய்வது வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சனுக்கு சிக்கலானதாகத்தான் அமையும். முப்பது சபைகளில் இந்தத் தேர்தல்களை இரண்டு வார காலத்துக்குள் இரவு, பகலாகக் கூட்டங்களை நடத்தி அவர் முடிக்க வேண்டும்.

அதற்காக அவர் தலைமுடியே இல்லாத தமது தலை யைப் பிய்த்துக்கொள்ள வேண்டித்தான் இருக்கும். அவ்வளவு நெருக்கடிகள் அதில் இருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

-மின்னல்-

## கண்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். மத்திய பஸ் நிலையத்தின் முன்னால் இடம்பெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தைச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இந்தப் போராட்டத்துக்குச் சமூக மேம்பாட்டு இணையம், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு, புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி ஆகிய வெகுஜன அமைப்புக்கள் ஆதரவை வழங்கின. (ஐ-7)

## அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தவை வருமாறு:-

கண்டியில் ஏற்பட்ட வன்முறைகளை அடுத்து, 10 நாளுக்கு நடைமுறையில் இருக்கும் வகையில் கடந்த 6ஆம் திகதி அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இது நாளை வியாழக்கிழமை நள்ளிரவுடன் முடிவடைகிறது. நாடு முற்றிலும் வழமைக்குத் திரும்பியுள்ளது எனவே, அவசர காலச்சட்டம் நீடிக்கப்படாது.

இனிமேல் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டிய தேவை இல்லை என்று நினைக்கிறேன்.

பொலிஸ்மா அதிபர் மற்றும் மூத்த பொலிஸ் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சந்திப்பின்போது, சமூக வலைத்தளங்களின் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. விரைவில் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.

எனினும், அவசரகாலச் சட்டம் மற்றும் சமூக ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இறுதி முடிவை எடுப்பார். – என்றார். (ஐ)

# யாழ். மாநகர சபைக்கான விகிதாசார உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சிகளும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான விகிதாசாரப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது யாழ்ப்பாணம் மாநகரசபையின் 27 வட்டாரங்களுக்கான உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

விகிதாசார உறுப்பினர்களின் பெயர்களைத் தற்போது கட்சிகள் பரிந்துரைத்துள்ளன.

இதில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ந.லோக தயாளன் மற்றும் பெண் உறுப்பினரான பி.நளினா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஈ.பி.டி.பி. கட்சியின் சார்பில் ப.யோகேஸ்வரி, ச.அனுசியா, நா.ஜெயந்தினி, மு.றெமீடியஸ், கு.செல்வவடிவேல், கா.வேலும் மயிலும் (ஜெகன்), கி.டேனியன், து.இளங்கோ (றீகன்) ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சி.குலேந்திரராசா, வி.விஜயதர்சினி ஆகியோரின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வி.மணிவண்ணன், த.அஜந்தா, சி.சுகந்தினி, தி.சுபாசினி ஆகியோரின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# கோட்டாவின் மனு 22 இல் விசாரணை

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மிதக்கும் ஆயுதக் கப்பல் வர்த்தகமொன்றைத் தனியார் நடத்த அனுமதியளித்ததமையினால் அரசுக்கு 114 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவித்து கோட்டாபயவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளை தடுப்பது தொடர்பில் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி கோட்டாபய நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் நீதிபதி பிரிதி பத்மன் சூரசேன மற்றும் சிரான் குணரட்ன ஆகியோரைக்கொண்ட நீதிபதிகள் குழாமினால் இந்த மனு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். (ஐ)

# மஹசன் பலகாயவின் அலுவலகம் முற்றுகை

## 7 பெற்றோல் குண்டுகள் மீட்பு

கொழும்பு, மார்ச் 14

கண்டி தீவிரவாத நடவடிக்கை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மஹசன் பலகாய அமைப்பின் பிரதானி என்று கூறப்படும் விதான பத்திரனகே அமித் ஜீவன் வீரசிங்கவின் கண்டி, குண்டசாலையிலுள்ள காரியாலயம் நேற்று சோதனைக்குட்படுத்தப்பட்டதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதன்போது, அங்கிருந்து இனங்களுக்கிடையில் முரண்பாட்டையும், குரோதத்தையும் ஏற்படுத்தும் வகையில் விநியோகிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த துண்டுப் பிரசுரம், பனர் உட்பட பல்வேறு பொருள்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

பெற்றோல் குண்டுகள் எனச் சந்தேகிக்கப்படும் 7 போத்தல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர நேற்று பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹசன் பலகாய அமைப்பின் சின்னம் பொறிக்கப்பட்ட மைக், வங்கிக் கணக்குப் புத்தகம், நிதி கிடைக்கப் பெற்ற பற்றுச் சீட்டுக்கள், வாகன அனுமதிப் பத்திரங்கள், இனவன்முறையில் ஈடுபடுத்துபவர்களுக்கு அணிவிக்கும் கைப் பட்டிகள், சி.பி.யு. கருவிகள் போன்ற பொருள்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவை மீட்கப்பட்டுள்ளன.

அமித் வீரசிங்கவின் கைத் தொலைபேசிக்கு வன்முறைச் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் உள்வந்த தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசேட அனுபவமுள்ள அதிகாரிகள் அமர்த்தப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என்றார். (ஐ)

# தவக்கால ஆற்றுகை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை 'வெள்ளியில் ஞாயிறு' எனும் இறைமகனின் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 22, 23, 24, 25ஆம் திகதிகளில் மாலை 6.45 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறும்.

இத்திருப்பாடுகளின் காட்சி 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டும் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும். பார்வையாளர்கள் தங்கள் ஆசனங்களைப் பதிவுகளை திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ள முடியுமெனத் திருமறைக் கலாமன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை


ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முள்ளை முள்ளால் எடுக்கும் அரசியல்

'முள்ளை முள்ளால் எடுப்பது' என்பார்கள். மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் - கூட்டு எதிரணியினர் - அரசியலில் இப்போது அந்த வேலையைத்தான் ஆரம்பித்திருக்கின்றார்கள் போன்று தோன்றுகின்றது.

தோற்கடிக்கப்படவே முடியாதவர்கள் என்று கருதப்பட்ட விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து, அதன் மூலம் இலங்கை அரசியலில் மிகப் பெரும் சக்தியாக எழுச்சி கொண்டு நிலை கொண்டிருந்தவர் மஹிந்த ராஜபக்ஷ.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசுக்கு இறுதிக் கட்டத்தில் வெற்றியை வாங்கித் தந்த - படைகளை வெற்றிப் பாதையில் வழிநடத்திய - இராணுவத் தளபதியே தமக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் குதித்தபோது, கொஞ்ச நஞ்சமல்ல, 18 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளினால் அவரைத் தோற்கடித்து தமது அரசியல் விஸ்வரூபத்தை வெளிப்படுத்தியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஆனால், அப்போது கூட்டு எதிரணியாகத் திரண்ட அவருக்கு எதிரான அரசியல் சக்திகள், மதிநுட்பமான அரசியல் தந்திரோபாயக் காய் நகர்த்தல்கள் மூலம் மஹிந்த இராச்சியத்தையே வீட்டுக்கு அனுப்பின.

சிறுபான்மையினருக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ அரசு முன்னெடுத்த கெடுபிடிப் போக்கையே அந்தச் சக்திகள் தமது சாணக்கிய தந்திரத்துக்கு வசமாகப் பயன்படுத்திக் கொண்டன.

இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்களவர்களுள் பெரும்பான்மையினர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்த போதிலும் -

பெரும்பான்மையின சிங்களவர்களில் சிறிய பகுதியினரையும், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என ஒட்டுமொத்த சிறுபான்மையினரையும் ஓர் அணியில் திரட்டி, அதன் மூலம் இலங்கை அரசியலில் மஹிந்த சாம்ராச்சியத்திற்கு முடிவு கட்டினர். அப்போது கூட்டு எதிரணியினர். மஹிந்த சாம்ராச்சியத்துக்கு அத்தோடு சமாதி என்றுதான் பலரும் நினைத்தனர்.

ஜனாதிபதிப் பதவியை இழந்து வெறுங்கையுடன் மெதமுலனவுக்குத் திரும்பிய மஹிந்த ராஜபக்ஷ, அடுத்து வந்த வாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியையும் கூட, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பறிகொடுத்தார். அத்தோடு அவரது அரசியல் வாழ்வு அஸ்தமமாகிவிட்டது என்று தான் பலரும் கருதினர். ஆனால் சாம்பல் மேட்டில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையாக தென்னிலங்கை அரசியலில் மீள விஸ்வரூபம் எடுக்கத் தயாராக எழுந்து நிற்கின்றார் அவர்.

பிரதமர் ரணிலின் தற்போதைய அரசை வீழ்த்தி, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு விரைவில் ஆட்சிக்கு வரும் எனக் கூட்டு எதிரணிக் கட்சியான ஸ்ரீலங்க பொது ஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூளுரைத்திருக்கின்றார்.

மீள ஆட்சியைக் கைப்பற்றும் எத்தனத்தில்தான் முள்ளை முள்ளால் எடுக்க முயல்கின்றது மஹிந்த தரப்பு.

பத்தாண்டு வரை ஆட்சியில் இருந்த மஹிந்த அரசு அந்தக் காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளைத் தாராளமாகக் கட்டவிழ இடமளித்துப் பார்த்திருந்தது; அல்லது தூண்டி வழி நடத்தியது. அந்தப் போக்கே சிறுபான்மையினரை ஒன்றுபடுத்தி மஹிந்த அரசை வீட்டிற்கு அனுப்ப வழி செய்தது.

அதே வழிமுறையை இப்போது ஆட்சியைப் பிடிப்பதற்கும் மஹிந்த தரப்பு பயன்படுத்துகின்றதோ என்ற சந்தேகம் பல தரப்புகளிலும் எழுந்திருக்கின்றது.

தான் அதிகாரத்தில் இருந்த போது சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் திரண்டெழுந்து அவ்வப்போது தாக்குதல் நடத்த இடம் விட்டுப் பார்த்திருந்தவர் மஹிந்தவின் சகோதரரும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ. அவ்வேளையில் அவ்வாறான - முஸ்லிம்களுக்கு எதிரான - தாக்குதல்களுக்கு அவரே பின்புலம் என்று சந்தேகித்தவர்களும் உள்ளனர். அத்தகைய இன வன்முறைச் சம்பவங்களே சிறுபான்மையினரை மஹிந்த தரப்புக்கு எதிராக ஒன்றுதிரள வைத்த அந்த ஆட்சிப் பீடத்தை மண்கவ்வ வைத்தது.

ஆனால் இப்போது கதை மாறுகின்றது. நல்லாட்சி அரசின் கீழும் முஸ்லிம்களுக்கு எதிரான இனவன்முறை வெடித்திருக்கின்றது. அதனையடுத்து முஸ்லிம் தரப்பில் முக்கியஸ்தர்கள் பலர் கோட்டாபய ராஜபக்ஷ பின்னால் அணி திரளத் தொடங்கியிருக்கின்றார்கள்.

எந்தத் தரப்புடன் தேவையில்லாமல் முரண்பட்டதால் ஆட்சியையே பறிகொடுக்கும் இக்கட்டு கடைசியில் வந்து சேர்ந்ததோ அதே தரப்புடன் இணைந்து இப்போதைய ஆட்சித் தரப்புக்கும் குடைச்சல் கொடுக்கும் செயற் போக்கு ஆரம்பித்திருக்கின்றது போலும்.

இதுதானோ முள்ளை முள்ளால் எடுப்பதென்பது?

## இலங்கையில் சூரிய சக்தித் தொழில்நுட்பம்: 100 மில். அமெ. டொலர் ஒதுக்கிய இந்தியா

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் சூரிய சக்தி தொழில்நுட்ப விருத்திக்கென இந்திய அரசு 100 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.



கடந்த 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவில் சர்வதேச சூரிய சக்தி குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சூரிய சக்தி மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக 46 நாடுகளை ஒன்றிணைத்த வகையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள், அபிவிருத்தி வங்கி தலைவர்கள், புதுப்பிக்கத்தக்க சக்தி வள வர்த்தக தலைவர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டின்போது சூரிய சக்தி தொழில்நுட்ப மாநாட்டுத் திட்டங்கள் அறிக்கை வடிவில் வெளியிடப்பட்டன.

இந்தியாவின் நிதியுதவியின் கீழ் 15 நாடுகளுக்கு 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சூரிய சக்தித் தொழில் நுட்பம் ஸ்தாபிக்கப்பட வுள்ளது.

இதன்படி இலங்கைக்கான சூரிய சக்தித் தொழில்நுட்பத்திற்கென 100 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் 200 ஆயிரம் வறிய குடும்பங்களுக்கான சூரிய சக்தி தொழில்நுட்பம் மற்றும் அரச பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றிற்கான சூரிய சக்தி தொழில்நுட்பத்தை நிறுவுதல் என்பன இம்முதலீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த மாநாட்டின்போது இந்திய ஜனாதிபதி நரேந்திர மோடி சூரிய சக்தி திட்டத்தினால் பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஏற்பட்ட நேர்மறையான காலநிலை மாற்றத்தை நினைவு கூர்ந்தார்.

அனைத்து நாடுகளும் தமது சக்திவலு தேவையை நிறைவு செய்வதற்கான வாய்ப்பேற்படுத்தல், பொதுவான கட்டமைப்பு ஒன்றின் மூலமாக ஒன்றிணைந்து செயற்படல், சூரிய சக்தி தொடர்பான தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல் ஆகியவற்றை பிரதான நோக்கமாகக் கொண்டு சூரிய சக்தி மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

## மெதுவான முன்னேற்றங்கள் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் கவலை!

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மிகவும் மெதுவாகவே முன்னெடுக்கப்படுகின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கவலை தெரிவித்துள்ளார்.



வடக்கிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியான போல் கொட்பிறி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைத் தாம் மீண்டும் சந்தித்தபோதே அவர் இந்தக் கவலையை வெளியிட்டார் என்று கீச்சகப் பதிவு ஒன்றில், போல் கொட்பிறி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, வடக்கிற்கான தனது பயணத்தின் போது மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயரையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர் கீச்சகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## தற்போது நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாத நிலைமை நிலவுகிறது

கொழும்பு, மார்ச் 14

தற்போது நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாத நிலையே காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



பந்துல குணவர்தன தெரிவிப்பு

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை (இன்று) தினம் நடைபெறும். நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கைவிடவோ அல்லது பிற்போடவோ இல்லை.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கூட்டு எதிரணியினர் பல பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டு வருகின்றனர்.

தற்போது நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட முடியாத நிலை காணப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து இந்த அரசை வீட்டிற்கு அனுப்ப வேண்டிய தேவை காணப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

## நாளை

15.03.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : அவிட்டம் பி.ப. 6.30 வரை
திதி : திரயோதசி பி.ப.5.41 வரை
சுபநேரம் : 07.51 –09.21 வரை
இராகுகாலம் : 1.51– 3.21 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகளுக்கு ஜெனீவாவில் பிரதிபலிப்புகள் வெளிப்படும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

நல்லிணக்க நகர்வுகளில் சர்வதேசம் அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் நிலையில் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைச் செயற்பாடுகள் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும். இம்முறை ஜெனீவாவில் இதற்கான பிரதிபலிப்புகள் வெளிப்படும் என கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார்.

அரசு உடனடியாக முன்னெடுக்கும் நடவடிக்கைகளே பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலை யில் இலங்கை விவகாரம் அடுத்த வாரம் விவாதிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு எதி ராக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாக இலங்கைக்கு ஏற்படும் சவால்கள் குறித்து கருத்துத்தெரிவிக்கும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை



அரசாங்கமாக நாம் நல்லிணக்க நகர்வுகள் குறித்து பல்வேறு வாக்குறுதிகளை கொடுத்துள்ளோம். அதில் பிரதானமானது புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதாகும்.

அதேபோல், நாம் பல்வேறு செயற்பாடுகளில் முன்னகர்வுகளைக் கையாண்டுள்ளோம். காணிகள் விடுவிப்பு விடயங்களில் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் வேலைத்திட்டங்கள் பலவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தகவல் அறியும் சட்டமூலம் கொண்டு வந்துள்ளமை, தேர்தல் முறைமை மாற்றங்கள் என்பனவும் இதன் ஒரு பிரதிபலிப்பாகக் கருத முடியும். எவ்வாறு இருப்பினும் நாம் இன்னும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டிய தேவை உள்ளது.

இம்முறை ஜெனீவாக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு நெருக்கடியாகச் சில விடயங்கள் அமையும். குறிப்பாக நாம் இன்னும் முன்னெடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளில் முன்னேற்றங்கள் இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்படும்.

எனினும் அண்மைக் காலமாக நாட்டில் சிறுபான்மை மக்கள் மீதான சில அடக்கு முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இவை எமக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியும். இந்தச் சம்பவங்கள் இப்போதே சர்வதேச ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

எனவே இவை தொடர்பில் கேள்வி எழுப்பப்படலாம்.எனவே அரசாங்கமாக நாம் முன்னெடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட வேண்டும். இதில் ஒரு சிலர் தமது அரசியல் சாதகத்தன்மையினை கருத்தில் கொண்டு இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயற்சித்து வருகின்றனர். ஆனால் அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

சிங்கள மக்களுக்கு உள்ள அதே உரிமை அந்தஸ்து இந்த நாட்டின் தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் உள்ளது.

ஆகவே, அதனை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கீகரிக்கவும் வேண்டும். இனவாதம் மூலம் நாட்டில் ஒருபோதும் ஐக்கியத்தை உறுதிப்படுத்த முடியாது.

ஆகவே, விரைவில் தீர்வுகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய கட்டாயம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சவூதி அரேபியாவில் இலங்கைப் பெண் சுட்டுப்படுகொலை!

இலங்கைப் பெண் ஒருவர் சவூதி அரேபியாவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியாவின் டுரைடா என்ற பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குப்பணிப்பெண்ணாகச் சென்ற 42 வயதுடைய இலங்கைப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த இலங்கைப்பெண்ணை சுட்டுக் கொன்ற 30 வயதான சந்தேக நபர் அதே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனச் சவூதி அரேபிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கொலைக்கு கட்டுத் துப்பாக்கி ஒன்று பயன்படுத்தப்பட்டிருப்பதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்திருக்கிறது.

இந்தப் படுகொலையைப் புரிந்தவர் மனேநோயாளி என்று அரேபிய ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் உயிரிழந்த இலங்கைப் பெண் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது தொடர்பான தகவல் இதுவரை வெளியிடப்படவில்லை.

# முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சுற்றுலாப் போக்குவரத்து பயிற்சி




கொழும்பு, மார்ச் 14

முச்சக்கர வண்டிச் சாரதிகள் பத்தாயிரம் பேருக்கு சுற்றுலாப் போக்குவரத்து பற்றிய பயிற்சியைப் பெற்றுக்கொடுக்க வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் நிதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்படுகிறது.

சகல முச்சக்கரவண்டி சங்கங்களுடன் பேச்சு நடத்தி பயிற்சிக்குச் சாரதிகள் தெரிவு செய்யப்படுவர்.

மூன்று கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்படும் என்று வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

(கு)

# இடியப்பப் பொதியில் சட்டை ஊசி

உணவகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இடியப்பப் பொதியில் இருந்து சட்டை ஊசி ஒன்று கிடைத்துள்ளது.

பொலனறுவை வைத்திய சாலைக்கு முன்னால் உள்ள உணவகத்தில், வைத்திய சாலை ஊழியர்களில் ஒருவர் உணவு பெற்றுக்கொண்டுள்ளார். அந்த உணவுப் பொதியிலேயே சட்டை ஊசி காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளுக்கு ஆள்கடத்தல்காரர்கள் தொடர்பில் எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 13

ஆள்கடத்தல்காரர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு, தமிழ்நாடு அகதிகள் முகாமில் உள்ள இலங்கை அகதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தினால் இதுதொடர்பான அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் இருந்து அகதிகளை ஆஸ்திரேலியாவிற்குப் படகுமூலம் அழைத்துச்செல்வதாக உறுதியளித்து, ஏமாற்றும் முகவர்கள் குறித்து தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்ப வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் இலங்கை அகதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து பெற்றுக் கொள்வதில் இருக்கின்ற சவால்களை விளங்கப்படுத்தும் வகையில், ஆஸ்திரேலிய அரசின் கடிதம் ஒன்றும் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் இருந்து அகதிகளாக ஆஸ்திரேலியா வந்த பலர், மீண்டும் இலங்கைக்கே நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் அகதி முகாம்களில் வசிக்கின்றவர்கள் அவ்வாறு ஆஸ்திரேலியா நோக்கி வந்தாலும் மீண்டும் நாடு கடத்தப்படுவார்களே தவிர, அங்கு குடியேற்றப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

கும்மிப்பூண்டி அகதிகள் முகாமில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த போதும், தற்போது வெறும் 4 ஆயிரம் அகதிகளே வசிக்கின்றனர்.

பலர் மீண்டும் இலங்கை திரும்பியுள்ள நிலையில், சிலர் அகதிகளாக வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என நம்பப்படுகிறது.




# இயேசு ஏன் பாடுகள் பட வேண்டும்?

நம்முடைய பாவங்களுக்காக, நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இயேசு சிலுவையை சுமந்தார். நாம் ஏன் நம் பாவங்களுக்காக நம் சிலுவையை சுமக்க கூடாது.

இலவசங்களை எதிலும் எப்போதும் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்க கூடாது. ஒரு முறை ஓர் இசைக்கலைஞர் வெகு விமரிசையாக வயலின் இசைத்து கொண்டிருந்தார். அந்த இசையை ரசித்த இன்னொருவர் அந்த கலைஞருக்கு ரூ.ஆயிரம் அன்பளிப்பாக வழங்கினார். கலைஞர் அதை பெற மறுத்தார். எனக்கு ஏன் உங்கள் அன்பளிப்பு? என் இசை உங்களை மகிழ்வித்தது என்றால் எனக்கும் மகிழ்ச்சியே.

அதற்கு ஏன் அன்பளிப்பு வழங்குகிறீர்கள்? இந்தப் பணிக்கு எனக்கு ஊதியம் கிடைக்கிறது. அதுபோதும் எனக்கு. உங்களுக்கு நன்றி என்று இலவசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அந்த கலைஞரைப் பற்றிய பார்வை அருகில் இருந்த பலரின் எண்ணங்களில் ஓங்கி உயர்ந்து நின்றது. ஏன் இலவசங்களை பெற வேண்டும்? இலவசங்களை பெறும்போது நாம் ஒரு வகையில் நம் உரிமைகளை அடகு வைத்துவிடுகிறோம்.

ஆதாம், ஏவாளை, பரம தந்தை நினைத்திருந்தால் இலவசமாக எக்காலமும் சிங்கார வனத்தில் வாழ வைத்திருப்பார். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் பாவம் செய்தபோது தண்டனை வழங்கினார். வாழ்வை மீண்டும் பெற, நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்ண வேண்டும் என்று கட்டளையிட்டார். உழைத்து உண்பது பாவமா? இல்லையே! உழைக்காமல் உண்பது தான் பாவம்.

இயேசு பிரானும் மக்களை பாவங்களில் இருந்து இலவசமாக மீட்டிருக்க முடியும். ஆனால் அவரும் அவ்வாறு செய்யவில்லை. மனித குலத்துக்கு மாண்பைத் தர, மீட்பைத் தர பாடுகள் பல பட்டார். தன் ரத்தத்தை சிந்தினார். சிலுவையில் மரித்து உயிர் நீத்தார். இயேசுவின் சிலுவைச் சாவுதான் மீட்பின் விலையாக அமைந்தது. நாமும் மீட்பை இலவசமாக பெறக்கூடாது.

அதனால்தான் ஆண்டவர் இயேசு சொன்னார், என்னை பின்பற்ற விரும்புபவர், தன்னலம் துறந்து, தன் சிலுவையை சுமந்து வர வேண்டும் (மத் 16:26) என்று. நம்முடைய பாவங்களுக்காக, நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இயேசு சிலுவையை சுமந்தார். நாம் ஏன் நம் பாவங்களுக்காக நம் சிலுவையை சுமக்க கூடாது? முள் இல்லாத ரோஜா மலர் இல்லை. இரவு இல்லாத பகல் இல்லை. பாடுகள் இல்லாத பரலோக வாழ்வு இல்லை.

காலைக்கதிர் Kalaikkathir



# விஞ்ஞானக் கண்காட்சி





மட்டக்களப்பு,மார்ச் 14

மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியின் விஞ்ஞானபாட ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சி கல்லூரியின் அதிபர் பயஸ் ஆனந்தராசா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது நூற்றுக்கு மேற்பட்ட விஞ்ஞானப் புத்தாக்க புதிய கண்டுபிடிப்புக்கள், விஞ்ஞானப் பொருள்கள், இலத்திரனியல் பொருள்கள், விவசாய விஞ்ஞானச் செயன்முறைகள் என்பன காட்சிப் படுத்தப்பட்டன

மாணவர்களின் விஞ்ஞான ஆற்றல்களையும், திறன்களையும் ஊக்குவித்து இலங்கையின் விஞ்ஞான வளர்ச்சிக்கு மாணவர்களை தயார்படுத்தும் கல்வியமைச்சின் விஞ்ஞான செயற்றிட்டமாக இக்கண்காட்சி நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் ஆயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் பாதிப்பு!



மட்டக்களப்பு,மார்ச்14

மட்டக்களப்பு - வெள்ளாவெளி பகுதியைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள், அதிகாரிகளின் புறக்கணிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளாவெளியில் சுமார் 3ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.ஆனால் அங்குள்ள சிறு நீர்த்தேக்கங்களுக்கான நீரை, அம்பாறை - இங்கினியாகலை நீர்விநியோகத் திட்டத்தில் இருந்து விநியோகிப்பதற்கு அதிகாரிகள் மறுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களிலும் நீர் விநியோகத்தை மேற்கொள்ள மறுத்து வந்தனர் எனவும், இந்த விடயத்தில் தங்களது அரசியல் தலைமைகள் முறையாகச் செயற்படவில்லை என்றும் விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இங்கினியாகல நீர் விநியோகத் திட்டமானது, கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் மழை தொடரும்



மட்டக்களப்பு,மார்ச்14

மட்டக்களப்பில் தற்போது பெய்து கொண்டிருக்கின்ற மழை வீழ்ச்சி தொடரும் என மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி கே.சூரிய குமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நவகிரி நகர்ப் பகுதியில் 77.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தும்பங்கேணிப் பகுதியில் 62.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மைலம்பாவெளிப் பகுதியில் 19.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பாசிக்குடாப் பகுதியில் 36.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 20.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நேற்யை தினம் பதிவாகியுள்ளன.

அத்துடன், வாகனேரிப் பகுதியில் 15.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கட்டுமுறிவுப் பகுதியில் 17.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கதிரவெளிப் பகுதியில் 28.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் 47.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

மேலும், தற்போது பெய்து கொண்டிருக்கின்ற மழைவீழ்ச்சியும் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கோயில் உண்டியல் திருட்டு: வசமாக சிக்கினான் கள்வன்!



ஏறாவூர்,மார்ச் 14

ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாந்துறைப் பிரதேசத்தில் அங்குள்ள காளி கோயில் ஒன்றின் உட்புற உண்டியலை மிகவும் சூட்சுமமான முறையில் அகற்றி, திருடிய பணத்தைப் புதருக்குள் எண்ணிக்கொண்டிருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லாவெளியைச் சேர்ந்த 18 வயதான இளைஞனே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொம்மாந்துறை கிராமத்தில் உள்ள மேற்படி காளி கோயிலின் உட்புறத்தில் பாதுகாப்பாக பொருத்தி வைக்கப்பட்டிருந்த உண்டியல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுப்போயிருந்தது எனக் கோயில் நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்தனர்.

இச்சம்பவம் பற்றி முறைப்பாடு அளித்ததும் துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார், கொம்மாதுறை 10ஆம் கட்டை ரயில் பாதையோடு அமைந்த புதருக்குள் மறைந்திருந்து திருடப்பட்ட உண்டியலை உடைத்து அதனுள் இருந்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்த இளைஞனை நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

# பூட்டிய அறைக்குள் இருந்து இளைஞனின் சடலம் மீட்பு!

ஏறாவூர்,மார்ச் 14

ஏறாவூர் பொலிஸ் பிரிவின் பலாச்சோலைக் கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து 21 வயதான இளைஞனின் சடலம் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலாச்சோலை முதலாவது குறுக்கு வீதியை அண்டி வசிக்கும் நிமலேந்திரன் பிரசாந்த் (வயது 21) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கூலித் தொழிலாளியான இவர் பெற்றோருடனும், சகோதரர்களுடனும் வசித்து வந்த நிலையில், நேற்றைய தினம் நீண்ட நேரமாகியும் வீட்டின் அறைக் கதவு திறக்கப்படாமல் இருந்த நிலையில், அறையைத் திறந்து பார்த்தபோது குறித்த இளைஞன் சடலமாக கிடப்பதை உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்து சடலம் மீட்கப்பட்டது என உறவினர்கள் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# சமூக வலைத்தளத் தடையை நீக்குமாறு இலங்கைக்கு அழுத்தங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சமூக வலைத்தளங்களின் மீதான கட்டுப்பாட்டை நீக்குமாறு அரசுக்கு சர்வதேச சமூகமும், சிவில் அமைப்புகளும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

கடந்தவாரம் கண்டியில் வெடித்தன இனவன்முறைகளை அடுத்து. சமூக ஊடகங்களை அரசு தடை செய்திருந்தது.

வன்முறைகள் தற்போது கட்டுக்குள் வந்துள்ள போதிலும், சமூக ஊடகங்கள் மீதான தடையை அரசு நீக்குவதற்கு இழுத்தடித்து வருகிறது.

இந்தநிலையில், சர்வதேச சமூகமும், சிவில் அமைப்புகளும்சமூகவலைத்தளங்கள் மீதான தடையை நீக்குமாறு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தியுள்ள இலங்கை அரசின் நடவடிக்கை குறித்து அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் கவலை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, ஆஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்சிசன் கீச்சகப் பதிவு ஒன்றில், சமூக ஊடகங்கள் மீதான தடையை நீக்குவதற்கான நேரம் வந்து விட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பவ்ரல், கபே போன்ற சிவில் அமைப்புகளும், இந்ததடையை நீக்குமாறு வலியுறுத்தி வருகின்றன.

இலங்கையில் சமூக வலையமைப்புகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து ஜெனீவாவில் முறையிடவும் சில தரப்புகள் முயற்சிகளை முன்னெடுத்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க)

## தென்பகுதியில் தாழமுக்கம்!



கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் வளிமண்டலத்தில் உருவான தாழமுக்கம் நாட்டின் தென்பகுதியில் நிலைகொண்டுள்ளது.

இது மென்மேலும் வலுவடைந்து மேற்கிற்கும், வடமேற்கிற்கும் இடையிலான திசையில் அரேபிய கடலை நோக்கி நகர்ந்து செல்லக் கூடும்.

இதன் காரணமாக தீவின் பல பாகங்களிலும், சூழவுள்ள கடற்பரப்பிலும் மேகமூட்டத்துடன் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம் என வளி மண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்திலும், காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு கடும் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக தெற்கு, ஊவா, கிழக்கு மாகாணங்களிலும், மாத்தளை, பொலன்னறுவை மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 முதல் 100 மில்லி மீற்றர் வரையிலான மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.


## மின் உற்பத்திக்குப் போதுமான மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை!

கொழும்பு, மார்ச் 14

பல மாவட்டங்களில் சில பிரதேசங்களில் குறிப்பிடத் தக்க மழை பெய்த போதிலும் நீரேந்து பகுதிகளில் மின் உற்பத்திக்கு அவை போது மானதல்ல என மின்சக்தி மற்றும் நிலைபேறான எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் அபிவிருத்தி பணிப்பாளர் சுலக்ஷன ஜயவர்தன கருத்து தெரிவிக்கையில்-

கடந்த சில தினங்களாக நாளாந்த மின்சார தேவை அதிகரித்துள்ளது.



நீர் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் ஆறு பெரும் நீர்த்தேக்க பகுதியில் குறிப்பிடத்தக்க மழைவீழ்ச்சி இடம்பெறவில்லை.

இருப்பினும் மின்சார துண்டிப்பின்றி மின்விநியோகத்தை மேற்கொள்ளவிருக்கின்றோம் என மின்சக்தி மற்றும் நிலைபேறான எரி சக்தி அமைச்சு பணிப்பாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

(க)

## தான் பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் என்கிறார் அமைச்சர் ஜோன் அமரதுங்க!



கொழும்பு, மார்ச் 14

தான் பிரதமர் பதவிக்கு தகுதியானவர் என சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்ததாக உள்ள சிரேஷ்ட அமைச்சர் தான் எனவும் அவர் கூறியுள்ளார்.

வத்தளை பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்ததாக அதிக ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரண்டாவது நபர் நான். எனினும் பிரதமர் பதவியை கேட்கப்போவதில்லை. அவ்வாறு தந்தாலும் எடுக்கப் போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 5 ஆயிரத்து 473 ஆசிரியர்களுக்கு இம்மாத இறுதியில் இடமாற்றம்!

10 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பாடசாலையில் சேவையாற்றும் 6 -11 ஆம் தர ஆசிரியர்கள் 5 ஆயிரத்து 473 பேருக்கு இம்மாத இறுதியில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றம் மூன்று கட்டங்களாக இடம் பெறுகின்றன. இதன் முதல் கட்டம் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்போது உயர் தர ஆசிரியர்கள் 2 ஆயிரத்து 590 பேருக்கு வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டம் இந்த ஆண்டின் ஆரம்ப பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒரே பாடசாலையில் 10 ஆண்டுகள் சேவையாற்றிய 1 - 5 ஆம் தர ஆசிரியர்கள் 1441 பேரில் 760 பேருக்கு இடமாற்றம் வழங்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி இந்த இடமாற்றம் வழங்கும் திட்டத்தின் மூன்றாம் கட்டம் இம்மாத இறுதியில் இடம் பெற உள்ளது என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம் நேற்று முதல் மூடப்பட்டுள்ளது!

கொழும்பு, மார்ச் 14

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம் நேற்று முதல் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளது.

அம்மை நோய் பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதன் காரணமாக பல்கலைக் கழகம் மறுஅறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளது என ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதி பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 3 தினங்களுக்குள் பல்கலைக் கழகத்தின் உள்ளக விடுதியில் உள்ள 27 மாணவர்களுக்கும் வெளி விடுதியில் உள்ள 8 மாணவர்களுக்கும்



அம்மை நோய் பரவியுள்ளது என்றும் பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதி பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமித் வீரசிங்கவின் மனைவி ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 14

கண்டி இனவாத நடவடிக்கையின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் மஹசொஹன் பலகாயவின் தலைவர் அமித் வீரசிங்கவின் மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைப்பதிவு செய்துள்ளார்.

தனது கணவர் இனவாதத்தை தூண்டுமாறு எந்தவொரு பகிரங்க அறிவிப்பையும் செய்யவில்லை. கடைகள், பள்ளிவாசல் என்பவற்றை தீ வைக்குமாறு எனது கணவர் அறிவிக்கவும் இல்லை. பொலிஸார் தான் தனது கணவரை வருமாறு அழைப்பு விடுத்தார்.

தற்பொழுது அனைவரும் எனது கணவர் மீது பழியைப் போட்டு விட்டு தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

(க)

# பாரவூர்தி சங்க நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணப் பாரவூர்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் கோண்டாவில் பகுதியிலுள்ள சங்க அலுவலகத்தின் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய தலைவராக எஸ்.ஜெயக்குமார், உப தலைவராக சி.அழகானந்தம், செயலாளராக க.செல்வச்சந்திரன், பொருளாளராக ம.ஜெயகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களாக ரவிச்சந்திரன் இளங்கநிலன், தவராசா, இராசேந்திரன், ஆனந்த ரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# தினசரி ராசி பலன்
## (14.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 30ஆம் நாள் புதன்கிழமை துவாதசித்திதி. பகல் 3.46 மணி வரை பின்னர் திரயோதசி. நட்சத்திரம் திருவோணம் பகல் 3.06 மணி வரை பின்னர் அவிட்டம். சித்தயோகம் பகல் 3.06 வரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 12.19 மணி முதல் 1.49 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 4.44 மணி முதல் 6.14 மணி வரை*

*இன்று பிரதோச விரதம். காரடையா நோன்பு*

**திவசம் செய்ய வேண்டிய திதி:** *மாசி மாத தேய்பிறை துவாதி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *திருவோணம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்**
விருத்தியான நாள். பணவரவு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் கலகலப்பான சூழ் நிலை உருவாகும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். சொத்துப் பிரச்சினை தீரும்.

**ரிஷபம்**
யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். இருந்த வீட்டை விற்று புது வீடு வாங்குவார்கள். வியாபாரம் ''ஓஹோ'' என்று நடக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும்.

**மிதுனம்**
சலனம் மிகுந்த நாள். உடன் பிறந்தவர்கள், உறவினர்களால் அலைச்சலும், செலவும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையும், வீண் பழியும் வந்து சேரும். உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கடகம்**
மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். தேக சுகம் பாதிப்படையும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும்.

**சிம்மம்**
நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப உறவு பலப்படும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**கன்னி**
மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும். வரவேண்டிய கடன் பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் உயர்வுகள்கிடைக்கும்.

**துலாம்**
சஞ்சலமான நாள். மனக்குழப்பம், யோசனை அதிகரிக்கும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். தொழிலில் மந்த நிலை காணப்படும். பொறுமை தேவை.

**விருச்சிகம்**
சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வீண் அலைச்சல்களும் உண்டாகும். குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் வந்து சேரும்.

**தனுசு**
உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் உயர்வு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முதன்மை அடைவார்கள். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும்.

**மகரம்**
மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். நீண்ட காலம் காணாதிருந்த சகோதரர்களைக் கண்டு மகிழ்வார்கள்.

**கும்பம்**
குழப்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். வியாபாரத்தில் தேக்க நிலை உண்டாகும். பெண்களின் திருமணப் பேச்சுவார்த்தைகள் குழப்ப நிலை அடையும்.

**மீனம்**
நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். இது வரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கும்.

**சந்திராட்டம நாள்: மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# தந்தை செல்வா நினைவுதின கட்டுரை - பேச்சுப் போட்டிகள்

தந்தை செல்வநாயகத்தின் பிறந்ததினம் எதிர்வரும் 31 திகதியும் அவரின் நினைவு தினம் அடுத்த மாதம் 26 ஆம் திகதியுமாகும். இந் நாள்களில் அவரை நினைவு கூரும் முகமாக ''செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையால்'' ஞாபகார்த்த நிகழ்வுகளை நடத்தவும் தந்தை தொடர்பான விழிப்புணர்வை இளைய தலைமுறையினருக்கு ஏற்படுத்தும் முகமாக கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப் போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. வடமாகாணப் பாடசாலைகள் மட்டத்திலான போட்டி - உயர் தரத்தில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி, திறந்த போட்டி - நாடு முழுவதும் வயது வேறுபாடின்றி விரும்பிய அனைவரும் பங்குபற்றக் கூடியதான கட்டுரைப் போட்டி கீழ்வரும் தலைப்புக்களில் திறந்த போட்டியாளர்கள் தமது கட்டுரையை அனுப்பலாம்.

1. தந்தை செல்வாவும் சமஷ்டிக் கோரிக்கையும்.
2. அஹிம்சைப் போராட்டமும் தந்தை செல்வாவும்.
3. தந்தை செல்வா விட்டுச் சென்ற தடங்கள்.
4. வன்முறைகள் பெருகி வரும் இன்றைய சூழ்நிலையில் தந்தை செல்வா வாழ்ந்திருந்தால்...

கட்டுரை மேலே குறிப்பிடப்பட்ட தலைப்புக்களில் விரும்பிய ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 400 -500 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுதல் வேண்டும். அத்துடன் கட்டுரையை செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை, தந்தை செல்வா இல்லம், தந்தை செல்வாவீதி, தெல்லிப்பழை என்ற முகவரிக்கு எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். போட்டி தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 0779710525, 0775390011 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இறுதிப் போட்டி மற்றும் பரிசில்கள் வழங்கும் வைபவம் அடுத்த மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கண்டி தீவிரவாதத்துடன் தொடர்புடைய 2 எம்.பிக்களை கட்சியிலிருந்து நீக்க முஸ்தீபு!

கொழும்பு, மார்ச் 14

கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட இனத் தீவிரவாத நடவடிக்கையுடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கூட்டு எதிர்க் கட்சியுடன் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரின் கட்சி உறுப்புரிமையைத் தடை செய்வதற்கான பிரேரணை ஒன்றை எதிர்வரும் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது முன்வைக்கவுள்ளோம் என அதன் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இனவாத முத்திரை ஒட்டப்படுவதற்கு யாருக்கும் இடமளிக்கக் கூடாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொலிஸ் விசாரணைகளின்படி இந்த இருவரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு கடுமையான தண்டனையைப் பெற்றுக் கொடுக்குமாறு ஸ்ரீ ல.சு.கட்சி சார்பாக ஜனாதிபதியைக் கோரவுள்ளோம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# வெள்ள அனர்த்த பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வள்ளங்கள்!

கொழும்பு, மார்ச் 14

திடீர் வெள்ள அனர்த்தம் ஏற்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வள்ளங்கள் மற்றும் இஞ்ஜின் உள்ளிட்டவை வழங்கப்படவுள்ளன.

இதற்கான வேலைத்திட்டத்தை பொலிஸ் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இதற்கமைவாக இந்த பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் தலைமையில் இந்த பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் மார்ச் 14

யாழ். நீரிழிவுக் கழகம் நடத்தும் நீரிழிவு நோயாளரை இனம் காணும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது என யாழ். நீரிழிவு கழக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

# செயற்குழு உறுப்பினர் தெரிவு

வேலணை, மார்ச் 14

வேலணை பள்ளப்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் புதிய செயற்குழுத் தெரிவு இடம்பெற்றது. புதிய செயற்குழு உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

தலைவராக - சொ.சிவயோகலிங்கம், உபதலைவராக - ப.ஞானபண்டிதன், செயலாளராக - திருமதி கைலாசபதி நித்தியலட்சுமி, உபசெயலாளராக - த.அருணகிரிநாதன், பொருளாளராக - திருமதி ஜெயகாந்தன் றாஜினி, வாசிகசாலைப் பொறுப்பாளராக - திருமதி றமணன் அசந்தா, நூல் நிலையப் பொறுப்பாளராக - திருமதி முகிலன் சிவாஜினி, கலை, கலாசாரப் பொறுப்பாளராக - சு.கேதீஸ்வரன், சமயப் பொறுப்பாளராக- திருமதி ஸ்ரீகந்தராசா மலர்விழி, விளையாட்டுப் பொறுப்பாளராக - கி.மணிராஜ், சுற்றாடல் சுகாதாரப் பொறுப்பாளராக - கு.பேரின்பநாதன், பத்திராதிபராக - ந.சசிதரன், உறுப்பினர்களாக - பொ.உதயகீதன், திருமதி தளைய சிங்கம் இராசேஸ்வரி, திருமதி நவகுமாரன் செல்வராணி, காப்பாளராக - பொ.பேரின்பநாயகம், கணக்காய்வாளராக - ப.ஆரூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை - **வவுனியா பிரதேசத்தில்** - கணேசபுரம் கிராமம், கூமாங்குளம், தவசிக்குளம் கிராமம், நெளுக்குளத்திலிருந்து இராயேந்திரகுளம் வரை, ஒமேகாலைன் ஆகிய இடங்களிலும்- **யாழ் பிரதேசத்தில்** - நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் - மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

# இராஜதந்திர நகர்வுகள் தமிழர் தரப்பில் போதா!



சாத்வீகமாக தம் உரிமைகளுக்காக போராடிய ஈழத்தமிழினம் அப்போராட்டங்கள் ஆயுத துணை கொண்டு ஒடுக்கப்பட்டபோது ஆயுதம் தாங்கிய தற்காப்பு போராட்டமாக அதை மாற்றிக் கொண்டனர்.

ஆயதம் தாங்கிய போராட்டத்தின் வளர்ச்சி தமிழர் உரிமைப் போராட்டத்தை சர்வதேச அரசியல் போர் அரங்கிற்கு அடுத்த கட்ட நகர்விற்காக நகர்த்தியது.

சர்வதேச அரசியல் போர் அரங்கில் அங்கீகாரம் என்ற இலக்கை நோக்கிய நகர்வில் புலம்பெயர் தமிழினம் மோசமான பின்னடைவைச் சந்திக்க, தற்காப்பு ஆயுதப் போராட்டம் என்ற வலுநிலை இழக்கப்பட்டது மட்டுமன்றி ஒரு மௌனிப்பு நிலைக்கும் அது தள்ளப்படுகின்றது.

வரலாறு எப்போதும் நல்ல ஒரு ஆசான் என்பார்கள். ஆனால் ஈழத்தமிழினத்தை பொறுத்தவரை அது ஒரு கடந்து போன, மறக்கப்படவேண்டிய விடயமாகவே பல வேளைகளில் இருந்து விடுகிறது.

படிப்பினை பட்டறிவு என்பன தவிர்க்



கப்படுபவையாகவே இருந்து விடுகின்றன. சமீப காலமாக பலவற்றை எழுத ஆரம்பித்து அது ஏற்படுத்தும் வலி காரணமாகவே அவற்றை பூர்த்தி செய்யாமல் விட்டிருக்கிறேன்.

எங்கு திரும்பினாலும் எங்கள் செயற்பாடுகள் வலி நிறைந்தவையாகவே இருக்கின்றன. ஆனால் அவை குறித்த புரிதல் எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதற்கு உதாரணமாக இங்கு ஒரு விடயத்தை பகிர்ந்து கொள்கிறேன்.

மீண்டும் ஒரு ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டத் தொடர் எங்கும் பேசப்படுகின்ற விடயம்.

ஆனால், அதன் பொறிமுறைக்குள் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய முக்கிய விடயங்கள் எவ்வாறு தவற விடப்படுகின்றன என்பது நோக்கற்பாலது.

புதிய ஐ.நா மனித உரிமைகள் அமையம் மார்ச். 15. 2006 இல் ஐ.நா. பொதுச்சபை யில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் கீழ் உருவாக்கப்பட்டது.

அதன் கீழ் ஐ.நா.வில் அங்கத்துவம் வகிக்கும் 193 நாடுகளின் மனித உரிமை நிலவரங்களை ஆய்ந்து அது குறித்த அறிக்கை ஒன்றையும் கைக்கொள்ளப்படவேண்டிய பரிந்துரைகளையும் வெளியிடும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டது.

இப்பொறிமுறையை முன்னெடுப்பதற்கான வழிமுறைகள் வரையப்பட்டு அவை ஈற்றில் 2007இல் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின் இப்பொறிமுறை 2008 இல் அமுலுக்கு வந்தது.

இதன் பிரகாரம் ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் 16 நாடுகள் ஆய்விற்கு உள்ளாக்கப்பட்டன.

வருடத்திற்கு மூன்று கூட்டத் தொடர்கள் என்பதால் ஓர் ஆண்டில் 48 நாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டன.

முதலாவது சுற்று 2012இல் முடிவிற்கு வர இரண்டாவது சுற்று 2013இல் ஆரம்பமானது. இரண்டாவது சுற்றில் 16 நாடுகளுக்குப் பதிலாக 14 நாடுகளே ஒரு கூட்டத்தொடரில் கவனத்தில் கொள்ளப்பட்டன.

அதனால் ஓர் ஆண்டில் 42 நாடுகளே கவனத்தில் கொள்ளப்பட இரண்டாவது சுற்று இரண்டு மேலதிக கூட்டத்தொடர்களை எடுத்தே 2017இல் முடிவிற்கு வந்தது. 2017 இன் பிற்பகுதியில் மூன்றாவது சுற்று ஆரம்பிக்க தற்போது நாம் மூன்றாவது சுற்று நாடுகள் குறித்த மனித உரிமைகள் ஆய்வில் உள்ளோம்.

இப்போது உங்கள் மனங்களில் ஒரு கேள்வி எழும். இலங்கையின் முறை எப்போது வரும் என்பதுதானே அது? இதற்கான பதில் சற்று அதிர்ச்சியாக உங்களுக்கு இருக்கலாம்.

மூன்றாவது சுற்றில் இலங்கையின் முறை தற்போது நடைபெறும் மார்ச் கூட்டத் தொடரிலேயே வந்துள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் ஆய்விற்கு உள்ளாக்கப்படும் நாடுகள் சீசெல், ஆர்ஜென்ரீனா, கபூன், கானா, பெரு, கௌதமாலா பெனின், கொரிய, இராச்சியம் சுவிற்ஸர்லாந்து, பாகிஸ்தான், ஸம்பியா, யப்பான் உக்ரைன், சிறீலங்கா ஆகிய 14 நாடுகளே ஆய்விற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இவை குறித்த ஆய்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவை குறித்த விவாதம் மார்ச் 6ஆம் நாள் முதல் மார்ச் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் சிறீலங்கா இறுதியாக எடுத்துக் கொள்ளப்படும்.

சிறீலங்காவில் மனித உரிமைகள் குறித்த ஆய்வு மீண்டும் 2023 இலேயே வரும். இன்னொரு விதத்தில் சொல்வதானால் எங்கள் அனைவருக்கும் வயது ஐந்தால் அதிகரித்திருக்கும்.

ஆனால் மனித உரிமைகள் கூட்டத் தொடர் என்றால் எப்போதும் 2015இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மட்டுமே பேசும் நாம், 'யு.பி. ஆர்.' எனப்படும் – யுனிவேசல் பீடியோற்றிக் ரிவியூ எனப்படும் – இவ்முக்கிய பொறி முறை குறித்து பேசுவதும் இல்லை, கவனத்தில் கொள்வதும் இல்லை.

காலம் கடந்துவிடவில்லைத்தானே இப்போதும் முன்னெடுக்கலாம் தானே என நீங்கள் நினைக்கலாம். இங்கு தான் இதன் பொறிமுறை குறித்த மேலதிக அறிவு தேவைப்படுகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

---

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவுகளுக்கான விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 2மணிக்கு சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது. தென்மராட்சி பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் இ.குருபரனும்,சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் சண்முகதாசனும் கலந்து சிறப்பித்தனர்.

இறுதி ஆட்டங்களாக வலைப்பந்தாட்டம்,ஆண்களுக்கான கரப்பந்தாட்டம்,100மீற்றர்,200மீற்றர் ஓட்டம், 4x100,4x400 அஞ்சல்,கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன.வலைப்பந்தாட்ட இறுதி ஆட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இடைக்குறிச்சி இளம் புயல் அணி சம்பியனானது.ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பாலாவி வொலிகிங்ஸ் அணியை வீழ்த்தி மட்டுவில் மோகனதாஸ் அணி வெற்றி வாகை சூடியது.

அதன் பின்னர் இறுதி நிகழ்வாக இடம்பெற்ற ஆண்,பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில்–

பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் கைதடி நாவற்குழி ஸ்ரீ மகாவிஷ்ணு அணியை தனது பலத் தால் வீழ்த்தி கச்சாய் கலைமகள் அணி வெற்றி பெற்றது. ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் இடைக்குறிச்சி செவன் ஸ்டார் அணியை வீழ்த்தி கச்சாய் கலைமகள் அணி வெற்றி பெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுபச்செல்வன்,60கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள்,சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,விளையாட்டு கழகங்கள், ரசிகர்கள் என ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். (ப-21)













# இராஜதந்திர நகர்வுகள் தமிழர் தரப்பில் போதா!

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இக்கூட்டத்தொடரில் இவ்ஆய்வு குறித்த இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது என்றால் அதற்கான ஆய்வு என்றோ ஆரம்பித்திருக்கும்.

ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் கவனத்தில் கொள்ளப்படும் நாடுகள் முதலாவது சுற்றில் தீர்மானிக்கப்பட்ட வரிசை கிரமத்தின் பேரில் ஒழுங்குபடுத்தப்படும். அவை குறித்த குழுவின் கூட்டம் ஐந்து ஆறு மாதங்களின் முன்னரே நடைபெறும்.

இதன் பிரகாரம் இக்கூட்டத்தொடரில் கவனத்தில் கொள்ளப்படும் நாடுகள் குறித்த ஆரம்ப கூட்டம் கடந்த ஆண்டு 2017 நவம்பர் 6ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் சிறீலங்கா குறித்து புதன்கிழமை நவம்பர் 15 ஆம் திகதி பிற்பகல் 2.30 முதல் மாலை 6 மணி வரை முன்னெடுப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

அதேவேளை இச்செயற்பாட்டின் கண்காணிப்பாளர்களாக மனித உரிமைகள் அவையத்தில் உறுப்பு நாடுகளாக உள்ள 47 நாடுகளில் இருந்து மூன்று நாடுகள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

சிறீலங்கா விடயத்திற்கு என தெரிவுசெய்யப்பட்ட நாடுகள் புருண்டி, கொரிய இராச்சியம் மற்றும் வெனிசூலா ஆகும். இந்தக் காலப் பகுதியில் ஆய்விற்கு உள்ளாகும் நாடு குறித்து ஏனைய நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள், தன் ஆர்வத் தொண்டர் நிறுவனங்கள் என பலரும் தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கலாம்.

அதேவேளை இதற்கான தமது அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக மனித உரிமைகள் அவையத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த விசேட நிபுணர்கள் அதாவது ஸ்பெசல் ரப்பட் டோஸ் – என அழைக்கப்படுவோரும் – நேரடியாக சிறீலங்கா சென்று தமது விவகாரங்கள் குறித்த நேரடி ஆய்வுகளைச் செய்து வருவர். கடந்த ஆண்டில் இவ்வாறான பலர் சென்று காட்டமான அறிக்கைகளை வெளியிட்டதும் உங்கள் நினைவில் இருக்கலாம்.

இங்கு தான் பெரும் கேள்வி ஒன்று எம்முன் எழுகின்றது. இந்த இறுதி அறிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகமாக உள்ள ஈழத்தமிழினம் என்ன செய்தது? தாயக அரசியல் வாதிகளை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் அவர்கள் தங்கள் இருக்கையை காப்பதற்கான உள்ளூராட்சித் தேர்தலில் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்கள்.

இதற்கெல்லாம் அவர்களுக்கு எங்கு நேரமிருந்தது? புலத்தில் கடை பரப்பியிருக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் என்ன செய்தன என்று கேட்டால் ஒருபகுதியினர் கூட்டமைப்பு சொல்வதையே செய்வோம். சொல்லவில்லை அதனால் செய்யவில்லை. என்பார்கள்.

மறு தரப்பினரோ 2020இல் சர்வஜன வாக்கெடுப்பில், 'பிசி', என்பார்கள். இப்போது புரிகிறதா 2009இல் ஈழத்தமிழினத்தின் பெரு வலுநிலை ஏன் இழக்கப்பட்டது என்று. நாம் புலம்பெயர்ந்திருக்கின்றோமே அன்றி எம் சிந்தனை இன்றும் மதவடி, புளியடியில் தான் இருக்கிறது.

இவ்விடயத்தில் பல பஸ்களை ஏற்கனவே தவறவிட்டாலும் தற்போதும் ஒரு பணி இருக்கிறது. அடுத்த வாரம் சிறீலங்கா விவாதத்திற்கு வரும் போது அதில் காட்டமான கருத்துக்களை நாம் வாழும் நாடு சார்பில் முன்னிலைப்படுத்தும் நாம் வாழும் நாட்டின் வெளி விவகாரத்துறையை நாடி எம் பணியை நாம் உடன் முன்னெடுக்கலாம், அவை உடனடியாகக் கருத்து வைப்பதற்கு தம்மைப் பதிந்தாக வேண்டும்.

சிறீலங்கா விரைந்து செயற்பட்டால் தனது ஆதரவு அணி நாடுகளைப்பதிவித்து தப்பிக் கொள்ளலாம். இது அனைவரும் சேர்ந்து இயங்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு. இதற்கான பார்வையும் அதற்கான தலைமைத்துவமும் அற்றிருப்பதுதான் எம் அவல நிலை.

இன்று எமது சமூகத்தில் நன்கு படித்தவர்கள், படித்த இளையவர்கள், தாயகத்தில் சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் சமூகம் என அனைவரிடமும் ஒரு சவாலாக வைக்கிறேன் நீங்களாவது உங்கள் இனத்திற்காக ஏதாவது செய்யுங்களேன்.

ஆனால் பாருங்களேன் வரும் நாள்களில் உலகெங்கிலும் இருந்து ஜெனீவாவிற்கு நம்மவர்கள் படையெடுத்து வருவார்கள் படம் எடுப்பார்கள் வெளியில் இருந்து செவ்வி வழங்குவார்கள். ஒரு தமிழன் இன்னொரு தமிழனை போட்டுத் தள்ளுவான்.

தாம் தான் சாதித்து விட்டதாக மார்பு தட்டி முரசறைவார்கள். நாமும் மந்தைகளாக ஆர்ப்பரித்து மகிழ்வோம். தமிழீழ தேசியத் தலைமை வேதனையுடன் சொல்லும். இது தான் நடக்கும். ★




HND BUSINESS MANAGEMENT MARKETING | HRM
Leading to BA (Hons) from the UK Universities

HND QUANTITY SURVEYING
Leading to BSc (Hons) from the UK Universities

HND COMPUTING
Leading to BSc (Hons) from the UK Universities

UGC Recognized TVEC Approved

HND BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY
Leading to BSc (Hons) from the UK Universities

HND CIVIL ENGINEERING
Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LLB LAW
Leading to LLB (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318
BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016
Best Employer Brand Award 2017
Asia's Training Excellence Award 2017

Mount Campus
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

Kandy Campus
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

Kalmunai Campus
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

Corporate Office
32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217
info@bcas.lk | www.bcas.lk

# இலங்கை அரசியலில் நிலைத்திருக்கும் கலவரங்கள்!

கலகங்களால், கலவரங்களால் தோன்றிய பூமியாக இலங்கை காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

ஆட்சி இயந்திரத்தில், தலைமை, அமைச்சு, நிர்வாகம், பொருளாதாரக் கொள்கை என்று அத்தனையும் மாற்றம் பெற்றிருந்தாலும், அரசியல் கொள்கையில் இலங்கை தேசம் இன்னமும் பழைமையான சித்தாந்தத்தில் மூழ்கிக் கிடக்கிறது. அது அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டிருப்பதனை உணர முடிகிறது.



மகாவம்சத்தை வரலாற்று நூலாகக் கொண்டு ஆரம்பிக்கும் சிங்கள தேசத்தின் வரலாற்றுப் பக்கங்கள், நாட்டை இனவாத, மத வாத சித்தாந்தத்திற்குள் அடக்கிக் கொண்டிருப்பதனையும், அதன் வழி சிறுபான்மைச் சமூகங்கள் அடக்கப்படுவதும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது.

திட்டமிட்டு உருவாக்கப்பட்ட வரலாற்றுப் பிழைகள் இன்று அனைத்து தரப்பையும் பிரித்து வைத்திருக்கின்றன.




கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து கொண்டிருக்கும் கலகத்திற்கான காரணம் சிங்கள சாரதி கொல்லப்பட்டமையும், உணவகத்தில் ஒருவகை மருந்துப் பொருள் கலந்து விற்பனை செய்தனர் என வெறும் சாக்குப் போக்கான கருத்தேயன்றி அவை தான் மூலகாரணம் என்று சொல்ல முடியாது.

முன்னதாகவே முஸ்லிம் மக்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தவர்களுக்கு சாரதி மீதான தாக்குதல் பெரும் வாய்ப்பாக மாறியது.

இலங்கை சிறுபான்மை இனங்களின் மீதான தாக்குதல் என்பது அச்சத்தின் உச்சத்தால் வந்ததேயன்றி அது வேறு எதற்காகவும் வந்ததல்ல. சிங்கள பேரினவாத கொள்கையைக் கொண்டிருப்பவர்களின் ஆதிக்க சிந்தனையும், பொருளாதாரத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாததன் விளைவுகளும் கலவரங்களிலும், வர்த்தக நிறுவனங்களை சூறையாடுவதிலும் வந்து நிற்கிறது.

முதல் முதலாக அரசியல் ரீதியாக கட்டமைக்கப்பட்ட கலவரம் 1915



ஆம் ஆண்டு பதிவாகியிருக்கிறது. இந்த கலவரத்தின் போது, கண்டியில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமையோடு, வணிக நிறுவனங்களும் முற்றாக அழிக்கப்பட்டன. இது வரலாற்றின் கறுப்பு பக்கத்தில் பதியப்பட வேண்டியது.

அந்தக் கலவரத்தின் எச்சங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தக் கலவரத்தில் சிங்களத் தலைவர்களான டி. எஸ் சேனநாயக்கா, ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, டி. எஸ்.விஜேவர்தனா, டொக்டர் நெயிசர்பெரேரா, ஈ. டி. த. சில்வா, எச் அமரசூரிய, ஏ. எச். மொலமூறே போன்றோர் கைது செய்யப்பட்டனர். இவர்களை சேர். பொன் இராமநாதன் அன்றைய காலகட்டத்தில் பிரித்தானிய அரசோடு பேசி விடுவித்தார்.

இது தமிழ்த் தலைமைகளின் நல்லெண்ண செயற்பாடாகப் பார்க்கப்பட்டாலும், அதனை சிங்களத் தலைவர்கள் இன்றுவரை நினைவு கொள்வதில்லை என்பது வேறு கதை.

1915 ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின்னர் அடுத்தடுத்து 1958, 1977, 1983 என்று கலவரங்கள் பெரும் துயரத்தைக் கொடுத்தன. இந்தக் கலவரங்களின் முக்கியமான நோக்கமே சிறுபான்மை சமூகங்களின் பொருளாதாரத்தை சிதைப்பதும், அழிப்பதும் தான்.

1983ஆம் ஆண்டு கலவரம் இலங்கை வரலாற்றின் கறுப்புப் பக்கங்களால் உருவானது. கறுப்பு ஜுலை என்று இன்று வரை தமிழ் மக்களால் துயரத்தோடு நினைவுபடுத்தப்படும் இந்தக் கலவரத்தின் வடுக்கள் இன்னமும் காயவில்லை. அன்று தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். வணிக நிறுவனங்கள் வேரோடு சாய்க்கப்பட்டன.

தமிழர்கள் மீண்டும் தலை நிமிர்ந்து கொள்ள முடியாதளவிற்கு தாக்குதல்கள் பலமாக அமைந்தன. திரும்பிய பக்கமெங்கும் பேரினவாதத்தின் கோரமுகம் தாண்டவ மாடியது.

யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதன் பின்னர் 1983 ஆம் ஆண்டு கலவரம் வெடித்ததாக சொல்லப்பட்டாலும் அது பெருமளவில் முன்னதாகவே திட்டமிடப்பட்டதாக அமைந்தது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாக இருக்கின்றது.

அன்று புலிகளின் தாக்குதலும் அதன் பின்னர் தான் கலவரம் வெடித்ததாகவும் பாடம் கற்பித்து வரலாற்றில் எழுதிய சிங்கள தேசம் அதேபோன்றதொரு புதிய கலவரத்தை அதே பாணியில் தொடங்கியிருக்கிறது.

கண்டி சிங்கள மக்களின் இதய பூமியாக தொடர்ந்தும் சித்திரித்துக் கொண்டிருக்கும் தரப்பினர், அதன் விளைவாக அந்தப் பகுதியில் ஏனை சமூகத்தினரின் வளர்ச்சியை ஒரு போதும் விரும்பியதில்லை. இலங்கையை தங்களின் ஆளுகைக்குள் கொண்டுவந்த போர்த்துக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் கண்டியை கைப்பற்றிக் கொள்ள முடியாமல் தோற்றனர்.

ஆனால், பிரித்தானியர்கள் கண்டியை கைப்பற்றிக் கொண்டதும், அது நேரடி ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்பட்டது. அன்று தங்களின் ஒட்டுமொத்த சுதந்திரமும் பறிபோனதாக சிங்களத் தரப்பினர் உணர்ந்தனர். இன்றுவரை அதே எண்ணத்தில் இருக்கிறார்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

அதன் விளைவுதான் சுதந்திரத்திற்குப் பின்னர் அதிகாரங்களை சிறுபான்மை சமூகங்களுக்கு பகிர்ந்து கொள்வதில் அவர்களின் தயக்கம் தொடர்வது.

1983 கலவரமும், 2009ஆம் ஆண்டு இறுதிக் கட்டப்போரும் தமிழ் மக்களின் அத்திபாரத்தையே ஆட்டம் காணச் செய்தன. அதிலும் 2009ஆம் ஆண்டு யுத்தம் பெரும் கோரத் தாண்டவத்தை ஏற்படுத்தியது.

புலிகளின் அழிப்பிற்குப் பின்னர், தமிழ் மக்களுக்கான தலைமையிழப்பு அல்லது வெற்றிடம் உருவாக்கப்பட்டது. இந்நிலையில் அடுத்து வணிக ரீதியில் அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களை இலக்கு வைக்கத் தொடங்கியது பேரினவாதம். அதன் விளைவாகப் போருக்குப் பின்னர் பள்ளிவாசல்களும் கடைத் தொகுதிகளும் சிறிது சிறிதாக தாக்கப்பட்டு வந்தன. இடையில் பௌத்த தேரர்கள் வெளிப்படையாகவே எச்சரித்துக் கொண்டும் இருந்தனர்.

ஒருகட்டத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இலங்கையில் அடைக்கலம் கொடுக்கப்படுகின்றது எனவும் குற்றம் சுமத்தினார்கள் ஆனால் அது அவ்வளவுக்கு எடுபடவில்லை.

**எஸ்.பி. தாஸ்**

இந்நிலையில் தான் அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதையாக, முஸ்லிம் இளைஞர்களின் தாக்குதலில் சிங்கள சாரதி இறக்க அதையே வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டனர். ஒட்டுமொத்தமாக கண்டியில் பெரும் வணிக நிறுவனங்களும் கடைகளும் கொளுத்தப் பட்டு அழிக்கப்பட்டன. பள்ளிவாசல்கள் நாசமாக்கப்பட்டன.

புலிகளின் பலத்தையழித்து, வடக்கு கிழக்கின் சொத்துக்களையும், சூறையாடியதன் பின்னர் எப்படித் தமிழ் மக்கள் அநாதரவாக்கப்பட்டார்களோ அதே செயலை மீண்டும் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள் அதிகார வர்க்கத்தினர். இது தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது.

சிறுபான்மைச் சமூகங்கள் வணிக ரீதியில் வளர்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதே போன்ற தாக்குதல்கள் தொடர்வதென்பது வாடிக்கையான நிகழ்வாகியிருக்கிறது. ஆனால், அரசாங்கம் இவற்றை சரியான முறையில் கையாளுவதில் பின் நிற்கும். ஏனெனில் அவர்களின் வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்படும் வகையில் செயற்பட அரசுகள் எப்போதும் விரும்புவதில்லை.

மஹாவம்சத்தை வரலாற்று நூலாகக் கொண்டு ஆரம்பிக்கும் சிங்கள தேசத்தின் வரலாற்றுப் பக்கங்கள், நாட்டை இனவாத, மத வாத சித்தாந்தத்திற்குள் அடக்கிக் கொண்டிருப்பதனையும், அதன் வழி சிறுபான்மை சமூகங்கள் அடக்கப்படுவதும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது.



# பெண்களின் பிரதிநிதித்துவம் 29 வீதமாக அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 14
உள்ளூராட்சிச் சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 29 வீதமாக அதிகரித்துள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் வட்டார அடிப்படையில் 535 பெண் வேட்பாளர்கள் வெற்றிபெற்றிருந்தனர்.

மேலும், 1991 பெண்கள், உள்ளூராட்சிச் சபைகளுக்கு அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களால் மேலதிகப் பட்டியல்கள் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, உள்ளூராட்சிச் சபைகளில் 2 ஆயிரத்து 526 பெண் பிரதிநிதிகளின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலதிகப்பட்டியலின்மூலம் அதிகளவு பெண்களை ஐக்கிய தேசியக் கட்சியே நியமித்துள்ளது.

முன்னர் உள்ளூராட்சிச் சபைகளில் ஒரு வீதமாக இருந்த பெண்களின் பிரதிநிதித்துவம் இப்போது 29 வீதமாக அதிகரித்துள்ளது. இது ஒட்டு மொத்தமாக பெரிய முன்னேற்றம்.

இந்தத் தேர்தலில் அரசியல் கட்சிகள், 17 ஆயிரத்து 128 பெண் வேட்பாளர்களை போட்டியில் நிறுத்தியிருந்தன.

இந்தத் தேர்தலின் மூலம், 8 ஆயிரத்து 721 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், 15 உள்ளூராட்சிச் சபைகளில், பெண்களுக்கான 25 வீத இடத்தை ஒதுக்கீடு செய்ய முடியவில்லை.

பருத்தித்துறை, மன்னார், முசலி, வெருகல், திருகோணமலை பட்டினமும் சூழலும், தம்பலகாமம், மூதூர், காரைதீவு, திருக்கோவில், மன்முனை, வனாத்தவில்லு, கொட்டகல ஆகிய பிரதேச சபைகளிலும், திருகோணமலை மற்றும் கிண்ணியா நகரசபைகளிலுமே, பெண்களுக்கான 25 வீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ப)

## திருமலை மீனவர்கள் இந்தியாவில் கைது

திருமலை, மார்ச் 14
திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த ஐந்து மீனவர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

கோடியக்கரை கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 28ஆம் திகதி திருகோணமலையில் இருந்து ஆழ்கடல் மீன்பிடிப்புக்காகச் சென்ற இந்த மீனவர்கள், சீரற்ற காலநிலை காரணமாகதிசை தவறித் தமிழகக் கடற் பரப்பிற்குள் பிரவேசித்துள்ளனர்.

எனினும் அவர்களைக் கைது செய்த கடலோரப் படையினர், காரைக்கால் தனியார் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்று, கியுபிரிவு பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த ரணில், தனுஷ்கர், அருண், மதுரங்க மற்றும் டிலான் ஆகிய மீனவர்களே கைதாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடும் திகதி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 14
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இந்த மாதம் 28 ஆம் திகதி வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

விடைத்தாள் திருத்தும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில் பெறுபேறுகளை மதிப்பிடும் நடவடிக்கைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன என அவர் கூறினார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக 6 லட்சத்து 88 ஆயிரத்து 573 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பை உடைத்துவிட்டால் முஸ்லிம்களின் நிலையே தமிழருக்கும்

### வன்னி எம்.பி. சி.சிவமோகன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துவிட்டால் முஸ்லிம்களின் நிலையே தமிழருக்கும் ஏற்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் மத்திய அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சி.சிவ மோகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கண்டிப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் மீதான சிங்களக் காடையர்களின் அடாவடித்தனங்களால் நாடு மீண்டும் ஓர் இருண்ட யுகத்தைக் கண்டுள்ளது.

தொடர்ந்தும் பேரினவாதிகளால் சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பது கவலைக்குரிய விடயமாகிறது.

ஐ.நா சபைக்கும், சர்வதேசத்திற்கும் வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்குச் சர்வதேச ஊடுருவல்களும், துரோகக் கட்சிகளும் முயற்சி செய்து வருகின்றன.

இம்முறை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் போது பெருந்தொகைப் பணத்துடன் சுயேச்சைகள் களமிறக்கப்பட்டன. இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கான இரகசிய நிகழ்ச்சி நிரலின் கீழே நடைபெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைத்துவிட்டால் முஸ்லிம் மக்களின் நிலையே தமிழருக்கும் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்





மன்னார், மார்ச் 14
மன்னார் மாந்தை மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், இணைத் தலைவரான வன்னி நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண சபை சுகாதார, சுதேச மருத்துவ அமைச்சர் ஞா.குணசீலன், வட மாகாண சபை உறுப்பினர் அ.அலிக்கன் சாரிப், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் பிரதி நிதியாக இணைச் செயலாளர் உட்பட திணைக்களத் தலைவர்கள், அதிகார சபை தலைவர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வன வளத்துறையினால் எல்லையிடப்பட்ட விடயம் தொடர்பாகவும், வனவிலங்குகள்திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட விடயம், யானை வேலி, ஏரிஎம் காட் வசதி ஏற்படுத்தும் விடயம், வயல் பற்றைகள் துப்புரவு செய்தல் விடயம், பெரியமடு குளம், வீதிகள், மேய்ச்சல் தரை நிலங்கள் தொடர்பாக, மாந்தை மேற்கு பகுதியிலிருந்து மாடுகள் கடத்தப்படுதல் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

(க 112)

## சபாநாயகர் ஓமானில் இரு தரப்பு பேச்சு

கொழும்பு, மார்ச் 14
சபாநாயகர் கரு ஜயசூரிய ஓமான் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அவரை ஓமான் மன்னர் குபூஸ் பின் சைட் அல் சைட் சார்பாக சையீட் ஷிஹாப் பின் டரிக் அல் சைட் தலைநகர் மஸ்கட்டில் நேற்றுமுன்தினம் வரவேற்றுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது என அந்த நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், பிராந்திய சபைத் தலைவரான யஹா பின் மஹ்போத் அல் மந்திரி, அதன் பிரதிநிதிகள் மற்றும் ஓமானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கே.பத்மநாதன் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

## மன்னார் பாப்பாமோட்டை, யோசவ்வாஸ் நகர் மீனவர்களின் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு

### பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

மன்னார் பெரும் நிலப்பரப்புப் பகுதியான பாப்பாமோட்டை பலகைமுனை கடற்கரைப் பகுதியில் மன்னார் தீவு தோட்டவெளி யோசவ் வாஸ் நகர் மீனவர்கள் தொழில் செய்வதால் நிலவிவரும் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலம் தீர்வை எட்டுவதற்கு மன்னார் மாந்தைமேற்குபிரதேசசெயலகஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாப்பாமோட்டை மீனவர்களின் பகுதியான பலகைமுனை கடற்பிராந்தியத்தில் மன்னார் தீவுப் பகுதியில் வசிக்கும் தோட்டவெளி யோசவ் வாஸ் நகர் மீனவர்கள் கட்டுவலை மூலம் மீன்பிடியில் ஈடுபடுவதால் பாப்பா மோட்டை உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு அடைந்து வருகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது.


இந்த நிலையில், மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் யோசவ்வாஸ் நகர் மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இதுதொடர்பில் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இருகிராமமீனவர்களின்வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இரு சமூக மீனவர்களின் சங்க நிர்வாகிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடற்றொழில்திணைக்களத்தலைவர்கள்இணைந்து சுமுகமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்த பாப்பாமோட்டைப் பகுதி மக்கள் தற்பொழுது தங்கள் சொந்தக் கிராமத்துக்கு மீள்குடியேற ஆரம்பித்துள்ளனர் வெளியூர் மீனவர்கள் தங்கள் பகுதியை ஆக் கிரமித்துள்ளதால் தங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுவருகிறது என பாப்பாமோட்டை மீனவர்கள் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தனர். அதேநேரத்தில் யோசவ் வாஸ் நகர் மீனவர்களுக்கும் இந்த இடத்தை விட்டால் வேறு இடங்களில் தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கள்இல்லாமையால் இருசமூகமீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (க–112)

**35. இலங்கைக்கே உரிய தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய மலர்.**

**1) நீல அல்லி  2) அல்லி  3) தாமரை  4) அந்தூரியம்**

36. 

அருகிலுள்ள உடுத்தொகுதியின் பெயர்

1) சிறுகரடி  2) ஓராயன்


3) விருச்சிகம்  4) கலப்பை

37. கொழும்பு நகரைச் சுற்றி ஓடும் நதியின் பெயர்.

1) தியவன்ன ஓயா  2) களுகங்கை  3) களனி கங்கை  4) தெதுறு ஓயா

38. மின்குமிழிலுள்ள வாயு எது?

1) ஆகன் வாயு  2) காபனீரொட்சைட்  3) ஒட்சிசன்  4) நீர்

39. 

இப்படம் தெளிவுபடுத்துவதுடன் சக்தியை விரயமாக்கும் விளையாட்டாக அமைவது.

1) கிளித்தட்டு  2) சடுகுடு

3) கபடி  4) பசுவும் புலியும்

40. நவீன போக்குவரத்துச் சாதனங்களால் ஏற்படும் பிரச்சினையாகக் கருதப்படுவது.

1) குறைந்த நேரம்  2) சுற்றாடல் மாசடைதல்

3) விரைவான பயணம்  4) அதிக எண்ணிக்கையானோர் பயணித்தல்

41. தரமான தேயிலையை நீரில் இடும் போது தோன்றும் நிறம்

1) கபிலம்  2) இளம்மஞ்சள்  3) சிவப்பு  4) ஊதா

42. 

இக்காந்தத்தின் பெயர்

1) குதிரை இலாட வடிவக் காந்தம் (பரியிலாடக் காந்தம்  2) குண்டுமுனைக் காந்தம்

3) சட்டக்காந்தம்  4) U வடிவக்காந்தம்

43. குளிர்காலத்தில் அணியக்கூடியதும் விலங்கு நாரினாலும் ஆன ஆடை

1) கம்பளி  2) பட்டு  3) பருத்தி  4) நைலோன்

44. “ரிச்சர்ட்” அளவினால் அளக்கப்படும் இயற்கை அனர்த்தம் பின்வருவனவற்றுள் எது?

1) சுனாமி  2) மழை  3) நிலநடுக்கம்  4) சூறாவளி

45. வானில் பூரண சந்திரன் தோன்றி ஒரு வாரத்தின் பின் காணக்கூடிய சந்திரனின் தோற்றம்.

1)   2)   3)   4) 





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **20**

தரம்-5  பகுதி – II  நேரம் – 1 மணித்தியாலம் 15 நிமிடம்



**11) பின்வரும் படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1.  ..........................................

2.  ..........................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. I am drinking water ..........................................
2. I will come tomorrow ..........................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**13) பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை எழுதுக.**

1) நூலகம் :- ..........................  2) அணில் :- ..........................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**14) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.**

1) வேகயென் துவன்ன :- ..........................................

2) செல்லம் கறன்ன யமுத :- ..........................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

✧ **தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

**15)** இலக்கங்களில் எழுதுக.

எண்பதாயிரத்து முந்நூற்று ஐம்பது ..........................................

**16)** எண்கோலத்தில் அடுத்து வரும் எண்களை எழுதுக.

1, 2, 6, 24, ..........., ...........

**17)** 1. (xix – vii) இன் பெறுமதியை உரோம எண்ணில் எழுதுக.

..........................................

**18)** வியாபாரி ஒருவர் முதல் நாள் 650 தேங்காய்களையும், இரண்டாம் நாள் முதல் நாளை விட 25 தேங்காய்கள் கூடுதலாகவும் விறபனை செய்தார். அவர் இரு நாட்களிலும் விற்பனை செய்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது?


..........................................

**19)** ஒரு மண்டபத்தில் 2 கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும், 4 கதிரைகள் வீதம் உள்ள 5 நிரைகளும் உள்ளன. எனின் அம் மண்டபத்தில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

..........................................

20) ஒரு குளிர்பானப் போத்தல் 6 பேரை உபசரிக்கப் போதுமானது எனின் 90 பேரை உபசரிக்கத் தேவையான குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................................

21) 

இவ்வுருவினுள்ளே உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

22) விமலா A என்னும் இடத்திலிருந்து 10m தெற்கு நோக்கிச் சென்று பின் அங்கிருந்து தனது வலது கைப்பக்கம் திரும்பி 10m பயணித்து B என்ற இடத்தை அடைந்தாள். தற்போது அவள் இருப்பது A எனும் இடத்திற்கு எத்திசையில் ஆகும்?

.......................................................................................................................

23) 


1. இத்திண்ம உருவின் பெயர் யாது?

.......................................................................................................

2. இத்திண்ம உருவில் உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?

24) ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களில் 3∴4 பங்கு விற்கப்பட்டதன் பின்பு 7 தோடம்பழங்கள் எஞ்சியிருந்தன. எனின் பெட்டியில் ஆரம்பத்தில் இருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................................

25) 


இவ்வுருவின் சுற்றளவு யாது?

.......................................................................

26) நீளம் 7m ஐக் கொண்ட கம்பியொன்றில் இருந்து 40cm நீளமான 12 கம்பித்துண்டுகள் வெட்டப்பட்ட பின் எஞ்சியுள்ள கம்பித்துண்டின் நீளம் யாது?

...................... மீற்றர் ...................... சென்ரிமீற்றர்

27) வெற்றிடத்தில் வரவேண்டிய விடையை எழுதுக.

| பொருள் | அளவு | செலுத்திய பணம் ரூபா | சதம் |
|---|---|---|---|
| பருப்பு | 2kg | 140 | 00 |
| அரிசி | 1kg | 60 | 00 |
| சீனி | 3kg | ............ | ............ |
| மொத்தம் | | 560 | 00 |


28) 1250ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 500ml நீரைக் கவனமாக ஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது?

.......................................................................................................................





29) கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் பாதை ஒன்றின் தூரம் km இல் காட்டப் பட்டுள்ளது.




1. குருநாகலில் இருந்து தம்புள்ள செல்வதற்கான தூரம் எத்தனை km ஆகும்?

.......................................................................................


2. தம்புள்ளையிலிருந்து கந்தளாய் செல்வதற்கான தூரம் எத்தனை km ஆகும்?

.......................................................................................

30) 1. வரைபிலுள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடத்தைப் பூரணப் படுத்துக.

2. அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபை பூரணப்படுத்துக.

| பழவகை | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அப்பிள் | 15 |
| மாம்பழம் | 10 |
| தோடம்பழம் | 25 |
| கொய்யா | 5 |
| அன்னாசி | ................ |




(16 x 2 = 32 புள்ளிகள்)

✣ **மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

31. நான் எனது வீட்டுக்கும் எனது பாடசாலைக்கும் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்து பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் நல்லதொரு பிள்ளையாகத் திகழ்வேன்" எனக் கூறும் படிநிலை யாது?

1) பிரார்த்தனை 2) மன உறுதி 3) உடலைத் தளர்த்தல் 4) மனதைத் தளர்த்தல்

32. ஒரு வித்திலைத் தாவரமாகவும் அதேவேளை உணவாகவும் பயன்படும் வித்து.

1) பலா 2) சோளன் 3) போஞ்சி 4) பப்பாசி

33. வித்து முளைத்தலுக்குத் தேவையான காரணிகளுள் ஒன்று.

1) காற்று 2) சூரியஒளி 3) முதிர்வடையாத வித்து 4) பாளை

34. தேசிய இலட்சனையில் அடங்காதது.

1) நிறைகலசம் 2) மலரிதழ் 3) அரசமிலை 4) நெற்கதிர்

# ஈராக்கில் பயங்கரவாதிகள் தாக்கு; 10 பேர் சாவு!



பாக்தாத்,மார்ச்.14

ஈராக்கின் மோசூல் மற்றும் கிர்க்குக் பகுதிகளில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 பேர் பரிதாபமாக பலியாகினர்.

ஈராக்கின் மொசூல் நகரில் உள்ள சன்னி இன மக்களின் உள்ளூர் தலைவரின் வீட்டைக் குறிவைத்த ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் வீட்டில் இருந்த சன்னி இனத் தலைவர், மகன் மற்றும் வீட்டிற்கு வந்த விருந்தாளிகள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

மேலும், கிர்க்குக் நகரில் ஈராக் இராணுவ அதிகாரி தனது குடும்பத்துடன் காரில் சென்று கொண்டிருந்தார். அவர்களைத் தாக்கத் திட்டமிட்ட பயங்கரவாதிகள் போலியாக சோதனைச் சாவடியை அமைத்தனர்.

இது அறியாமல் சோதனைச் சாவடியில் நின்ற இராணுவ அதிகாரியின் காரை எரித்தனர். இதில் சிக்கிய இராணுவ அதிகாரி, அவரின் கர்ப்பிணி மனைவி, 2 குழந்தைகள் மற்றும் உறவினர் உட்பட 6 பேர் பரிதாபமாக உடல் கருகி உயிரிழந்தனர்.

இதையடுத்து, ஐ.எஸ். பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## முதியவர் வயிற்றில் 100 மீன் எலும்புகள்

சீனாவில் 69 வயதான முதியவர் வயிற்றில் படிந்திருந்த 100இற்கும் மேற்பட்ட மீன் எலும்புகளை வைத்தியர்கள் அகற்றியுள்ளனர்.



சீனாவின் சிச்சுவான் மாகாணத்தை சேர்ந்த 69 வயது முதியவர் ஒருவருக்கு அடி வயிற்றில் கடுமையான வலி ஏற்பட்டது.

உடனே அவரை மருத்துவ மனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சி.டி.ஸ் கான் பரிசோதனை செய்யப்பட்டது. அவரது அடி வயிற்றில் குடல் பகுதியில் 100இற்கும் மேற்பட்ட மீன் எலும்புகள் (மீன் முட்கள்) படிந்து இருப்பது தெரிய வந்தது. எனவே ஊசி போன்று இருந்த 100இற்கும் மேற்பட்ட மீன் எலும்புகளை ஆசன வாய் வழியாக வைத்தியர்கள் அகற்றினர்.

சில நாள்களுக்கு முன்பு இந்த முதியவர் விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதில் கெண்டை மீன் உணவு பரிமாறப்பட்டது. அதை விரும்பி சாப்பிடும் அவர் மீனின் சதைப்பகுதி மற்றும் எலும்புகள் அனைத்தையும் அப்படியே விழுங்கி விட்டார்.

அதில் எலும்புகள் (முட்கள்) ஜீரணம் ஆகாமல் அப்படியே வயிற்றின் அடிவயிறு, குடல் பகுதியில் தங்கிவிட்டது. தற்போது அகற்றிய எலும்புகள் தவிர மேலும் சில எலும்புகள் அகற்றப்படாமல் உள்ளன. குடல் பகுதியில் வீக்கம் இருப்பதால் சில நாள்கள் ஓய்வுக்குப் பிறகு மீதமுள்ள எலும்புகளை அகற்ற வைத்தியர்கள் முடிவு செய்துள்ளனர்.

### ரஷ்ய அதிபர் தேர்தல்:

## புடினை எதிர்த்துப் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர் திடீர் நீக்கம்

மொஸ்கோ,மார்ச்.14

ரஷ்ய அதிபர் தேர்தலில் புடினை எதிர்த்துப் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர் திடீரென நீக்கப்பட்டார். இதனால் புடினுக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ளது.



ரஷ்ய அதிபராக விளாடிமிர் புடின் பதவி வகித்து வருகிறார். அவருடைய பதவி காலம் விரைவில் முடியவடைய இருப்பதால் வருகிற 18ஆம் திகதி அதிபர் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அன்று நடைபெறும் தேர்தலில் எந்த வேட்பாளரும் 50 வீத வாக்குகளைப் பெறவில்லை என்றால் 2ஆம் மற்றும் இறுதிச்சுற்று தேர்தல் அடுத்த மாதம்(ஏப்ரல்) 8ஆம் திகதி நடத்தப்படும். இதில், முதல்கட்ட தேர்தலில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் வேட்பாளர்கள் மட்டும் போட்டியிடுவார்கள்.

இதனால் அங்கு அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. 2012ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் புடின் 64வீத வாக்குகள் பெற்று முதல் சுற்று தேர்தலிலேயே அபார வெற்றி கண்டார். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால் அவரால் ரஷ்யாவில் 2024ஆம் ஆண்டு வரை ஆதிக்கம் செலுத்த முடியும்.

தற்போது அவர் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதால் கடும் போட்டியை சந்திக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அவருடைய அரசுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை அடுக்கி கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு போராட்டங்களை நடத்திய எதிர்க் கட்சித் தலைவர் 41 வயது அலெக்சி நவல்னி புடினுக்கு சவாலாக திகழ்ந்து வந்தார்.

தற்போது அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு ரஷ்யாவின் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. ஒரு வழக்கில் அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டதைக் காரணம் காட்டி அதிபர் தேர்தலில் அவருடைய வேட்பு மனுவை தேர்தல் ஆணையம் நிராகரித்தது.

இதனால் அவர் தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் உருவாகி விட்டது. இது அரசியல் சூழ்ச்சி என்று அலெக்சி நவல்னி குற்றம்சாட்டினார். முக்கிய எதிரி களத்தில் இல்லாத நிலையில் புடின் அதிபர் தேர்தலில் முன்னணி வேட்பாளராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானில் விவசாய நிலங்களை பாதுகாக்க ரோபோ ஓநாய்கள்

ரோக்கியோ,மார்ச்.14

ஜப்பானில் விவசாய நிலங்களைப் பாதுகாக்க ஒரு ரோபோ ஓநாய் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தனது சோதனையில் வெற்றி பெற்றதையடுத்து அடுத்த மாதம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படவுள்ளன.



65 சென்ரி மீற்றர் நீளமும், 50 சென்ரி மீற்றர் உயரமும் கொண்ட இந்த ரோபோ விலங்கு, உண்மையான விலங்கைப்போல முடியையும், சிவப்பு நிறக் கண்களையும் கொண்டுள்ளது.

காட்டுப்பன்றிகளிடம் இருந்து அரிசி மற்றும் செஸ்நட் பயிர்களைக் காப்பாற்ற இது வடிவமைக்கப்பட்டுள்ளது. சோதனை அடிப் படையில் கடந்த ஜூலை மாதம் முதல் ஜப்பான் கிழக்கில் உள்ள கிசாருசு நகரத்தில் இருக்கும் வயல்களில் இது பயன்படுத்தப்பட்டது.

விலங்குகள் இந்த ரோபோ ஓநாயிடம் நெருங்கி வந்தால், இதன் கண்கள் மிளிருவதுடன், ஊளையிடவும் தொடங்கும். சூரிய ஆற்றல் மூலம் இது செயற்படும்.

இந்த ரோபோ ஓநாய் இருக்கும் பகுதிகளில், பயிர் இழப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துவிட்டன என கூறுகின்றது ஜப்பான் விவசாயக் கூட்டுறவு நிறுவனம். (ப)

### இறந்து விடுவாய் எனப் பொய் ஆரூடம்:

## சீன ஜோதிட நிலையத்தை தரை மட்டமாக்கிய பெண்

பீஜிங்,மார்ச்.14

சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் தவறாக ஆரூடம் கூறிய ஜோதிட நிலையத்தை இடித்து தரை மட்டமாக்கியுள்ளார்.

சீனாவில் சிசுவான் மாகாணம் மியான்யங் பகுதியைச் சேர்ந்த 70 வயது பெண் வாங். கடந்த ஆண்டு மார்ச் மாதம் அங்குள்ள ஜோதிடரைச் சந்தித்தார்.

அப்போது வாங் 2018ஆம் ஆண்டைப் பார்க்கமாட்டார் அதற்குள் இறந்து விடுவார் என ஆரூடம் கூறினார். அதை உண்மை என அவர் நம்பினார். ஒவ்வொரு நாளையும் மரண பயத்துடன் கழித்தார்.

ஆனால் அவர் நல்ல உடல் நலத்துடன் ஆரோக்கியமாக இருக்கிறார். இந்த நிலையில் கடந்த வாரம் ஜோதிடர் நிலையத்துக்கு வாங் சென்றார்.

ஜோதிடரைச் சந்தித்து அவர் ஆரூடம் பொய் என வாக்குவாதம் செய்தார். மேலும் ஆத்திரத்தில் ஜோதிட நிலையத்தை இடித்துத் தரை மட்டமாக்கினார்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் விசாரணை நடத்தினார்கள்.

தவறாக ஆரூடம் சொல்லி வாங் மனதை நோகடித்ததற்காக அவரிடம் ஜோதிடரை மன்னிப்புக் கேட்க வைத்தனர். சீனாவில் ஜோதிடம் பிரசித்தி பெற்ற கலையாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.


# மின்னல் வேக ஏவுகணையைச் சோதனை செய்த ரஷ்யா

மொஸ்கோ,மார்ச்.14

ஒலியை விட 10 மடங்கு தாக்கும் திறன்கொண்ட ஏவுகணைச்சோதனையை ரஷ்யா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

ரஷ்யாகின்ஷல் எனப்படும் அதிவேக ஏவுகணையை தயாரித்துள்ளது. இது ஒலியை விட 10 மடங்கு வேகமாக பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்தது.

இந்த ஏவுகணையை ரஷ்யா நேற்று முன்தினம் பரிசோதித்தது. மிக்-31 சூப்பர் சோனிக் தடுப்பு ஜெட் விமானத்தில் இருந்து இந்தச் சோதனை நடத்தப்பட்டது.



முடிவில் இந்தச் சோதனை வெற்றி பெற்றது என அறிவிக்கப்பட்டது. இது ரஷ்யாவின் தெற்கு இராணுவத்தில் இணைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# விவசாயிகள் கோரிக்கைகள் ஏற்பு - போராட்டம் வாபஸ்



மும்பை,மார்ச் 14

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த செவ்வாய்க் கிழமை முதல் நாசிக்கிலிருந்து மும்பை வரை நீண்ட பேரணி நடத்திய மகாராஷ்டிர மாநில விவசாயிகள் தங்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டுள்ளனர்.

விவசாயிகளின் பெரும்பாலான கோரிக்கைகளை மகாராஷ்டிர மாநில அரசு ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

விவசாயிகளின் பெரும்பாலான கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். இது தொடர்பாக அவர்களுக்கு எழுத்து பூர்வமாக ஒரு கடிதத்தையும் அளித்துள்ளோம் என்று மகாராஷ்டிர மாநில வருமானத்துறை அமைச்சர் சந்திரகாந்த் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் கடுமையான வறட்சி நிலவி வருவதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள், மாநில அரசு தங்களின் கடன்களை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், விவசாய பொருள்களுக்கான குறைந்த பட்ச விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும், மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரதிய கிசான் சபா என்னும் விவசாயிகள் அமைப்பு நாசிக் முதல் மும்பை வரையிலான ஒரு நீண்ட பேரணியை கடந்த செவ்வாயன்று சில நூறு விவசாயிகளுடன் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

# உயிர் வலிக்கிறது ஊரே அழுகிறது

## குரங்கணி தீ விபத்துக்கு கவிஞர் வைரமுத்து வேதனை



சென்னை,மார்ச் 14

குரங்கணி மலைப்பகுதி தீ விபத்தில் உயிரிழந்தவர்ளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கவிஞர் வைரமுத்து உயிர் வலிக்கிறது என்ற தலைப்பில் வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம் போடி அருகே உள்ள குரங்கணி மலைப்பகுதியில் மலையேற்ற சாகச பயிற்சிக்கு சென்ற 36 பேர் காட்டுத் தீயில் சிக்கியதும், அவர்களில் 9 பேர் உயிரிழந்தமையும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்துக்காக பலரும் வேதனை தெரிவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கவிஞர் வைரமுத்து டுவிட்டரில் கூறியிருப்பவை வருமாறு:

உயிர் வலிக்கிறது. ஊரே அழுகிறது. காட்டுத் தீயில் கருகிய தங்கங்கள் மீது கண்ணீர் சொரிகிறேன். காயப்பட்டவர்கள் பிழைக்க வேண்டுமே என்று பேராசை கொள்கிறேன். பெற்றோர் நிலையில் நின்று பெருவலி உணர்கிறேன். சாவே உனக்கொரு சாவு வந்து சேராதோ தீயே உனக்கொருநாள் தீமூட்டி பாரோமோ என்ற கண்ணதாசன் வரிகளைக் கடன் வாங்கி கலங்குகிறேன்.

இந்த விபத்தில் இயற்கையின் பங்கு எவ்வளவு, மனித பங்கு எவ்வளவு என்பது ஆய்வுக்குரியது. மரணத்திலிருந்து பாடம் படிப்போம். புதிய இழப்புகள் நேராமல் காப்போம். என்று வைரமுத்து கூறியுள்ளார்.





அரசுமுறை பயணமாக இந்தியா சென்றுள்ள பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் கங்கை ஆற்றில் பிரதமர் மோடியுடன் படகில் சென்று வாரணாசி நகரைப் பார்வையிட்டார்.

# இன்ஸ்பெக்டர் எட்டி உதைத்தமையால் பலியான உஷா கர்ப்பிணி இல்லை

## பிரேத பரிசோதனை அறிக்கையில் தகவல்

திருச்சி,மார்ச் 14

திருச்சியில் வாகனச் சோதனையின்போது இன்ஸ்பெக்டர் எட்டி உதைத்தமையால் பலியான உஷா கர்ப்பிணி இல்லை என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் பாபநாசம் அருகில் உள்ள சூலமங்கலத்தை சேர்ந்தவர் ராஜா. இவர் கடந்த 7ஆம் திகதி இரவு தனது மனைவி உஷாவுடன் மோட்டார் சைக்கிளில் திருச்சிக்குச் சென்று கொண்டிருந்தார்.

துவாக்குடி அருகில் செல்லும் போது அங்கு வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் காமராஜ் மற்றும் பொலிஸார் ஹெல்மெட் அணியாதவர்களுக்கு அபராதம் விதித்து கொண்டிருந்தனர்.



ராஜாவை, பொலிஸார் மறித்த போது அவர் நிறுத்தாமல் ஓட்டிச்சென்றார். இதனால் ஆத்திரமடைந்த இன்ஸ்பெக்டர் காமராஜ், விரட்டி சென்று ராஜாவின் மோட்டார் சைக்கிளை எட்டி உதைத்தார். இதில் இருவரும் தடுமாறி கீழே விழுந்ததில் உஷா சம்பவ இடத்திலேயே பலியானார். அப்போது உஷா கர்ப்பிணியாக இருந்தார் எனவும் கூறப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த பொது மக்கள் பொலிஸாரைக் கண்டித்து வீதி மறியலில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் உஷா மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கையை திருச்சி அரசு மருத்துவமனை நிர்வாகத்தினர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அதில், உஷா கர்ப்பிணி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவரது வலது புறசினைப்பையில் ஒரு கட்டி இருப்பதாகவும், இடது புறச் சினைப்பையில் கரு ஏதும் இல்லாமல் இயல்பாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பு)

# ராஜீவ் காந்தி படுகொலை சந்தேகம் எழுப்புகிறது

## சுப்பிரமணியசாமி தெரிவிப்பு

புதுடில்லி,மார்ச் 14

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை பல சந்தேகங்களை எழுப்புகிறது என பா.ஜ.க. தலைவர் சுப்பிரமணியசாமி தெரிவித்துள்ளார்.

எனது தந்தை ராஜீவ் காந்தியைக் கொன்ற கொலையாளிகளை நாங்கள் மன்னித்து விட்டோம் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சமீபத்தில் குறிப்பிட்டிருந்தார். காலங்கடந்த அவரது இந்த கருத்து அரசியல் ஆதாயத்துடன் வெளியிடப்பட்டது என தமிழ்நாட்டைச் சேர்ந்த தலைவர்கள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், பிரபல செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த சுப்ரமணியசாமி கூறியவை வருமாறு:

இலங்கை அரசு கேட்டுக் கொண்டமையால், இந்திய இராணுவத்தை இலங்கைக்கு ராஜீவ் காந்தி அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், ராஜீவ் கொலையாளிகளுக்கு காட்டப்படும் கருணை அவரது படுகொலையில் சந்தேகங்களை எழுப்பியுள்ளது. கொலையாளிகளை மன்னித்து விட்டேன் எனக் கூறும் ராகுல் காந்திக்கு தேசபக்தி குறைவு என்பதையும் காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# சிறையில் சசி சாதாரண உடையில் இருக்கும் படம் வெளியானது

பெங்களூர்,மார்ச்.14

பெங்களூர் சிறையில் தேசிய மகளிர் ஆணைய தலைவி ரேகா சர்மா திடீரென்று ஆய்வு செய்தபோது சசிகலா, இளவரசி சிறைச்சீருடையின்றிச் சாதாரண உடையில் இருந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், சசிகலா சாதாரண உடையில் இருக்கும் படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் உள்ள சசிகலாவுக்கு சொகுசு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன எனக் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. இதற்காக சிறைத்துறை முன்னாள் டி.ஜி.பி. சத்திய நாராயணராவ் 2 கோடி ரூபா லஞ்சமாகப் பெற்றார் எனவும் அவர் மீது முன்னாள் சிறைத்துறை டி.ஐ.ஜி. ரூபா குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக சத்திய நாராயணராவ் மீது ஊழல் தடுப்பு படை வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கியுள்ளது.

இந்த நிலையில், கடந்த 17ஆம் திகதி பரப்பனஅக்ரஹாரா சிறையில் தேசிய மகளிர் ஆணைய தலைவி ரேகா சர்மா திடீரென்று ஆய்வு செய்தார்.



அப்போது, அவர் சிறையில் சசிகலா மற்றும் இளவரசி ஆகியோர் சிறை சீருடையின்றி, சாதாரண உடையில் இருப்பதை பார்த்து அதிகாரியிடம் கடிந்து கொண்டார்.

இந்த நிலையில், சிறையில் ரேகா சர்மா ஆய்வு செய்தபோது சாதாரண ஆடையில் சசிகலா இருக்கும் படம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.




## உலகக்கிண்ணத் தகுதிச்சுற்று -
# ஐக்கிய அரபு எமிரேட்ஸை சுருட்டியது அயர்லாந்து

ஹராரே,மார்ச் 14

உலகக்கிண்ணத் தகுதிச்சுற்றுக் கான போட்டியில் ஐக்கிய அரபு எமி ரேட்ஸை சுருட்டிய அயர்லாந்து அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பையும் தக்கவைத்துக் கொண்டது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட் டிக்கான தகுதிச் சுற்று ஸிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற் றுள்ள 10 அணிகளில் இருந்து இறு திப்போட்டிக்கு முன்னேறும் இரு அணிகள் அடுத்த ஆண்டு இங்கிலாந் தில் நடக்கும் உலகக்கிண்ணக் கிரிக் கெட் போட்டிக்கு தகுதி பெறும். இதற் கிடையே முதல் சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தன.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டி களில் அயர்லாந்து மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது. மழை பெய்ததால் ஆட்டம் 44 ஓவராக குறைக்கப்பட் டது.

அயர்லாந்து அணிசார்பில் தொடக்க ஆட்டக்காரர்களாக வில்லியம் போர்ட்டர் பீல்டும் பால் ஸ்டிர்லிங்கும் களமிறங் கினர். இருவரும் பொறுப்பாக விளையா டினர். இதனால் அணியின் எண் ணிக்கை கணிசமாக உயர்ந்தது. அணி யின் எண்ணிக்கை 205 ஆக இருக்கும் போது போர்டர்பீல்டு 92 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் அயர்லாந்து நிர்ணயிக்கப்பட்ட 44 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 313 ஓட்டங் கள் எடுத்தது.ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் மொக மது நவீத் 3 விக்கெட் டுகளும், இம் ரான் ஹெய்டர் 2 விக்கெட் டுகளும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 314 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி களமிறங்கியது. ஆனால், அயர் லாந்து அணியினரின் துல்லியமான பந்துவீச்சில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி சிக்கி 29.3 ஓவரில் 91 ஓட்டங்களில் சுருண்டது.

அயர்லாந்து சார்பில் ரான்கின் 4 விக்கெட்டுகளும், சிமி சிங் 3 விக்கெட் டுகளும் மெக்கார்த்தி 2 விக்கெட்டுக ளும் கைப்பற்றினர். இதையடுத்து, உலக கிண்ணத் தகுதிச்சுற்றின் அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை தக்கவைத்துக் கொண்டது.

# தன்னைத் திருமணம் செய்ய நினைத்த பெண்ணுக்கு கோஹ்லியின் பரிசு!


இந்திய அணியின் தலைவரான விராட் கோஹ்லி தன்னைத் திரும ணம் செய்ய நினைத்த பெண்ணுக்கு இனி மேல் இது போன்று செய்யக் கூடாது என்று அறிவுரை வழங்கிய மையுடன், பரிசு ஒன்றையும் கொடுத் துள்ளார்.

இந்திய அணியின் தலைவரான விராட் கோஹ்லியும், பிரபல நடிகை யான அனுஷ்கா சர்மாவும் நான்கு ஆண்டுகளாக காதலித்து அதன் பின் திருமணம் செய்து கொண்டனர்.

கோஹ்லி திருமணம் செய்து கொள்வதற்கு முன், அவரைப் பல பெண்கள் காதலித்தனர். அதை அவர்கள் மைதானத்தில் எழுத்துப் பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளனர், சமூகவலைத்தளமான டுவிட்டர் மூலமும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் இங்கிலாந்து வீராங்கனையான டேனி வியாட், கோஹ்லியிடம் தன்னைத் திரும ணம் செய்து கொள்ளும் படி டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

2014 ஆம் ஆண்டு ரி-20 உல கக் கிண்ணத் தொடரின் அரையி




றுதியில் தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான ஆட்டத்தின போது கோஹ்லி ஆட்டத்தில் மெய் மறந்து போன டேனி இந்த விருப்பத்தை கோஹ்லி யிடம் தெரிவித்திருந்தார்.

இது பற்றி டேனி தற்போது விளக் கியுள்ளார், நான் அன்று ஒரு டுவிட் செய்தமை, இந்திய ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்டது.

அதன் பின் இங்கிலாந்து சுற்றுப் பயணத்திற்காக கோஹ்லி இங்கி லாந்து வந்தார். அப்போது அவர் என்னைச் சந்தித்தார். இது போன்று எல்லாம் டுவிட் செய்யக் கூடாது. மக் கள் இதை உண்மை என்று நம்புவார் கள் என்று கூறினார்.

அப்போது நான் அவரிடம் மன் னித்துவிடுங்கள் என்று கூறினேன். நான் அவருடைய மிகப் பெரிய ரசிகை என்பதால், அவருடையது ஒன்றை பரிசாக கொடுத்தார்.

அந்த துடுப்பாட்ட மட்டையைத் தான் நான் இந்த மாதம் நடைபெற வுள்ள இந்தியா – இங்கிலாந்து– அவுஸ் திரேலியா ஆகிய அணிகளுக்கிடை யிலான முத்தரப்பு ரி-20 போட்டியில் பயன்படுத்த போகிறேன் என்று கூறியுள்ளார்.

# மோசமான சாதனை படைத்த இந்திய வீரர்



ரி-20 போட்டிகளில் ஹிட் விக்கெட் முறையில் ஆட்ட மிழந்த முதல் இந்திய வீரர் என்ற மோசமான சாதனையை கே.எல்.விஜய் படைத்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்று வரும் முத்தரப்பு ரி-20 தொட ரின் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் இலங்கை – இந் திய அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் இந்திய அணி வீரர் கே.எல் ராகுல் 17 பந்துகளில் 18 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ராகுல் ஆட்டமிழந்த விதம் அவருக்கு ஒரு மோசமான சாதனையைப் படைக்க உதவியிருக்கிறது.

அதாவது இலங்கையின் ஜீவன் மெண்டிஸ் பந்தை அடிக்க முயன்ற போது, ராகுல் கால் ஸ்டெம்பில் பட அவர் ஹிட் விக் கெட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்மூலம் ரி-20 போட் டியில் ஹிட் விக்கெட் முறை யில் ஆட்டமிழந்த முதல் இந் திய வீரர் என்ற புதிய மோச மான சாதனைக்கு ராகுல் சொந் தக்காரராகியுள்ளார்.

# இந்தியா – பங்களாதேஷ் இன்று பலப்பரீட்சை



நிதாஹாஸ் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் பங்களாதேஷுடன் இன்று மோதுகிறது.

3 நாடுகள் பங்கேற்கும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி யின் 5ஆவது லீக் ஆட்டம் இன்று நடக்கிறது. இதில் இந்தியா – பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இந்திய அணிக்கு இது கடைசி லீக் ஆட்டமாகும். 3 போட்டியில் விளையாடி இரண்டில் வென்றது. ஒன்றில் தோற்றது. ஏற்கனவே பங்களாதேஷை இந்திய அணி வீழ்த்தி இருந்ததால் நம்பிக்கையுடன் உள்ளது.

அதேநேரத்தில் பங்களாதேஷ் அணி இலங்கைக்கு அதிர்ச்சி கொடுத்து இருந்தது. அந்த அணி ஒரு வெற்றி, 3 தோல்வியுடன் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது

# ரபாடாவிற்கு 2 போட்டியில் விளையாடத் தடை விதிப்பு

ஆஸ்திரேலிய கப்டன் மற்றும் துணைக் கப்டனுடன் மோதிக் கொண்ட ரபாடாவிற்கு 2 போட்டி களில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா–ஆஸ்திரே லியா இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி போர்ட் எலிசபெத் தில் நடைபெற்றது. முடிவடைந்த இந்தப் போட்டியில் தென்னா பிரிக்கா 6 விக்கெட்டுகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது. தென்னாபிரிக்காவின் வெற் றிக்கு ரபாடா முக்கிய காரண



மாக இருந்தார். முதல் இன்னிங் ஸில் ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்திய ரபாடா, 2 இன்னிங் ஸில் 6 விக்கெட்டுக்கள் கைப் பற்றி ஆட்ட நாயகன் விருதை பெற்றார்.

முதல் இன்னிங்ஸில் ஸ்மித்தை எல்.பி.டபிள்யூ. மூலம் ஆட்டமிழக்கச் செய்தார். ஸ்மித் வெளியேறியபோது, மகிழ்ச்சி யில் ரபாடா ஸ்மித் மீது தோள் பட்டையை வைத்து இடித் தார்.

இதனால் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. 2ஆவது இன் னிங்ஸில் வோர்னரை க்ளீன் போல்டாக்கினார். வோர்னர் ஆட்டமிழந்தமையும் அவரது முகம் அருகில் சென்று கொக்கரித்தார். இதனாலும் குற்றம் சாட்டப்பட்டது.

ஸ்மித்திற்கு எதிரான குற் றச்சாட்டிற்காக மூன்று டிமெரிட் புள்ளிகளும், வோர்னருக்கு எதி ராக குற்றச்சாட்டில் ஒரு டிமெ ரிட் புள்ளியும் வழங்கப்பட்டது. ஏற்கனவே ஐந்து டிமெரிட் புள் ளிகள் பெற்றிருந்தமையால் இரண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடதடைவிதிக்கப்பட்டுள்ளது. ஸ்மித் விவகாரத்தில் போட்டியின் சம் பளத்தில் இருந்து 50 வீதம் அப ராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபையின் 118ஆவது அமர்வு நேற்றுப் பேரவைச் செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் சிவில் பாதுகாப் புத்திணைக்களத்தின் கீழ் இராணுவத்தால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகள் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன? என எழுப்பிய கேள்வி தொடர்பில் சபையில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவைத் தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நேற்று (நேற்றுமுன்தினம்) யாழ்.தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்கள் குழு கூடியது. இதன்போது இராணுவத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் முன்பள்ளிகளை வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைப்பது தொடர்பில் தெளிவாக ஆராயப்பட்டது.

அதில் இராணுவம் நிர்வகிக்கும் முன்பள்ளிகள் அனைத்தையும் வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என நாடாளுமன்றில் அரசிடம் கோரிக்கை விடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதனை நாடாளுமன்றஉறுப்பினர்கள் தொடர்ந்து முன்னெடுப்பார்கள். – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாகாணக் கல்வி அமைச்சர் சர்வவேஸ்வரன்,

இராணுவம் நிர்வகிக்கும் முன்பள்ளிகளில் மாணவர்களுக்கு இராணுவ ஒழுக்கங்கள் போதிக்கப்படுவதாகவும், மாணவர்களுக்குச் சீருடைகளும் இராணுவச்சீருடைகளை ஒத்தனவாக வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த முன்பள்ளிகளை வடக்கு மாகாண சபை பொறுப்பேற்றால் அவர்களுக்கு இப்போது வழங்கப்படும் ஊதியம் 30 ஆயிரம் ரூபா வரை காணப்படுவதால் மற்றைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் அதே அளவு ஊதியத்தை வழங்க வேண்டிய நிலை வரும். இல்லையேல் ஏற்றத்தாழ்வுகள் வரும் எனவும் கூறினார்.

இதற்கு மீண்டும் பதிலளித்த அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம்,

இராணுவம் நிர்வகிக்கும் முன்பள்ளிகளை மட்டுமல்லாமல் அந்த முன்பள்ளிகளுக்காகப் பாதுகாப்பு அமைச்சு ஊடாக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியையும் வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கவேண்டும் என்றே நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த விடயத்தைச் சரிசெய்யலாம். –என்றார். (ஐ-7)

## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு நேற்று ஜப்பானில் நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள இம்பிரியல் ஹோட்டலில் நேற்றுப் பிற்பகல் இந்த மாநாடு நடைபெற்றது.

அபிவிருத்தி மூலோபாய சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, ஜப்பான் நாடாளுமன்றப் பொருளாதார வர்த்தக மற்றும் கைத்தொழில் துறை துணை அமைச்சர் மசகி ஒகுசி உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது விசேட சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளடங்கிய குழுவினர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கை விவகாரங்களுக்கான அதிகாரிகளை நேற்று (13.03.2018) ஜெனீவாவில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போதே அவர்களிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் சமர்ப் பிக்கப்படவிருக்கும் அறிக்கையில், இலங்கை தொடர்பில் வேறு வழிவகைகளை ஆராய வேண்டும் என அவர் குறிப்பிட்டிருப்பதை வரவேற்பதாகவும் அதிகாரிகளிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது.

இந்தக் கலந்துரையாடலின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்தவை வருமாறு:-

தமிழரின் ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்து அதனை இலங்கை அரசு அழித்தது. அதன்போது, மனித உரிமைகள் சார்ந்த விடயங்களில் ஐ.நா. மனித உரிமைகள் சபை பொறுப்புடன் நடக்கவில்லை. இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பாதிக்கப்பட்ட தமிழருக்கு நியாயம் வழங்கும் வகையில் அமைந்திருக்கவில்லை.

யுத்த காலத்தில் சிங்கள அரசிற்குச் சார்பாகவோ அல்லது நடுநிலையாகவோ இருந்த முஸ்லிம் மக்கள் இன்று இலங்கை அரசினால் குறிவைக்கப்பட்டுள்ளனர். தமிழர்களுக்குத் தேசம் என்கின்ற நிலப்பரப்பு இருந்ததால் அவர்களை அழித்த இலங்கை அரசு தேசம் என்கின்ற நிலப்பரப்பு இல்லாத முஸ்லீம் மக்களின் பலமாகத் திகழ்கின்ற அவர்களது பொருளாதாரத்தைத் தற்போது சிதைத்து வருகின்றது. இதன் வெளிப் பாடே அண்மையில் கண்டியில் இடம்பெற்ற கலவரங்கள்.

இலங்கை அரசு தன்னைத் தட்டிக்கேட்க ஆள் இல்லை. தான் எதுவும் செய்யலாம் என்ற தோரணையிலேயேசெயற்பட்டு வருகின்றது. இது இலங்கை பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை அரசை விடுவித்ததால் ஏற்பட்டவிளைவே.

எனவேதான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கை தொடர்பில் உரையாற்றும் போது, இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம்வகிக்கும் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்த வேண்டும் என கோருகின்றோம். – எனத் தெரிவித்தனர்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை அமிர்தலிங்கத்தின் சிலையொன்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபை வாளகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலை திறப்பு விழா நிகழ்வு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உட்பட பலநூற்றுக்கணக்கானோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் பங்கேற்க அன்றையதினம் யாழ்.வரும் சம்பந்தன், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் சிலையைத் திறந்துவைப்பதுடன், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் நெல்லியடிக்கும் செல்லவுள்ளார் எனவும் கூறப்பட்டது. (ஐ-7)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரப்பட மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை கூறிய கதையால் சபை சிறிது நேரம் சிரிப்பொலியால் அதிர்ந்தது.

நேற்றைய மாகாண சபை அமர்வின்போது மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா கல்வி தொடர்பான விசேட கவனவீர்ப்பு ஒன்றைக் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாணத்தில் பல பாடசாலைகளில் அதிபர் இல்லாமை மற்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களைக் கல்வி அமைச்சர் மீது மாகாண சபை உறுப்பினர்கள்முன்வைத்தனர்.

இதன் தொடர்ச்சியாகச் சபையில் பேசிய மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஒரு கதை கூறினார்.

ஒரு நாட்டில் ஒருமன்னன் இருந்தானாம். அந்த மன்னனுக்கு ஒரு மகள் இருந்தாளாம். அந்த மகளுக்கு மன்னன் மணமகன் தேடினான். அப்போது மன்னன் தன் அமைச்சர்களை அழைத்து 100 அறிவுள்ள மணமகன் வேண்டும் எனக் கேட்டானாம்.

அதற்கமைய அமைச்சர்களும் 100 அறிவுள்ள மணமகனைத் தேடிஅலைந்து களைத்துப்போன நிலையில் மீண்டும் மன்னனிடம் வந்தனர். 100 அறிவுள்ள மணமகனைத் தேடிப்பிடிக்கமுடியவில்லை. ஆனால் 98 அறிவுள்ள மணமகனைத் தேடிப் பிடித்துள்ளோம் எனக் கூறினார்கள். சரி பரவாயில்லை. 2 அறிவுகள்தானே குறைகின்றன எனக் கூறிய மன்னன், அமைச்சர்கள் காட்டிய அந்த மணமகனைத் தனது மகளுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

திருமணம் முடிந்த பின்னர் அமைச்சரை அழைத்த மன்னன், மணமகனுக்கு 98 அறிவுகள் உள்ளன. 2 அறிவுகள் தான் குறைகின்றன எனக் கூறியிருந்தீர். அவரிடம் இல்லாத அந்த 2 அறிவுகளும் எவை? என வினவினாராம்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், சொல் புத்தி, சுய புத்தி ஆகிய இரு அறிவுகளும் மணமகனுக்கு இல்லை எனக் கூறினாராம். அப்படித்தான் இங்கே நிலைமை உள்ளது எனக் கதையைக் கூறினார் பசுபதிப்பிள்ளை.

இதனால் சிறிது நேரம் அவையில் சிரிப்பொலி மேலிட்டது. (ஐ-7)

## பேஸ்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணவக்க கோரியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கண்டி மோதல் சம்பவங்கள் அமைதியான முறையில் முடிவடைந்துள்ளதால்பேஸ்புக், வட்ஸ்அப், வைபர் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்படவேண்டும்.

கண்டியில் வன்முறைகள் சுமூகம் அடையும் வரையில் சமூக ஊடகங்கள் மீது தடை விதிக்கப்பட்டதில் தவறில்லை. எனினும், தொடர்ச்சியாக சமூக ஊடகங்கள் மீது தடை விதிக்கப்படவேண்டிய அவசியமில்லை.

வர்த்தக நடவடிக்கைகள், தொழில் விவகாரங்கள், கல்வி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு வட்ஸ் அப், வைபர் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறான சமூக ஊடகங்களை முடக்கிவிட்டு மீளவும் கற்காலத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. – என்றார். (ஐ)

## சிலாபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக முல்லைத் தீவுப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் அதிகாலை முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் இருந்து மூன்று மீனவர்கள் ஒரு படகில் தொழிலுக்குச் சென்றுள்ளனர்.

சிலாபத்தைச் சேர்ந்த மில்ராஜ் மிரண்டா (வயது -51) , இம்மானுவேல் மிரண்டா (வயது-48), மிதுறதன் மிரண்டா (வயது-24) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே இவ்வாறு காணாமற்போயுள்ளனர்.

இவர்கள் நேற்று முன் தினம் நண்பகல் கரை திரும்புவதாக தெரிவித்தபோதும் கரை திரும்பவில்லை. இதனையடுத்து இவர்களைக் காணவில்லை என முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இவர்களைத் தேடும் நடவடிக்கை 9 படகுகள் மூலம் முன்னெடுக்கப்பட்டபோதும் பயன் எதுவும் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இதேவேளை, காணாமற்போன மீனவர்களைத் தேடுவதற்குக் கடற்படைக்குத் தகவல் வழங்கப்பட்டபோதும் அவர்கள் அக்கறையாகச் செயற்படவில்லை என்று அப்பகுதி மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ -81)

## சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. உதவிப் பொதுச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் தமது 3 நாள்கள் விஜயத்தைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவு செய்தார்.

அவர் இலங்கையில் விதிக்கப்பட்டுள்ளசமூகவலைத்தளங்களுக்கான தடைகள் குறித்து அவதானம் செலுத்தினாரா? என்று செய்தியாளர்கள் ஐ.நா. பேச்சாளரிடம் கேள்வி எழுப்பினர்.

ஆனால் இது தொடர்பான விவரங்கள் தமக்கு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்ட பேச்சாளர், எனினும் இலங்கையில் அனைவருக்கும் இணையத் தளப் பாவனைச் சுதந்திரம் கிடைக்கப்பெறவேண்டும் என்பதற்கு ஐ.நா. ஆதரவளிப்பதாகக் குறிப்பிட்டார். (ஐ)

## இணைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைத் தலைவர்களாக நியமித்திருப்பதாலேயே அந்தக் கூட்டங்களுக்கான திகதியைத் தீர்மானிப்பது முதல் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்ள வேண் டியுள்ளது.

இவ்வாறு நேற்று விசனம் வெளியிட்டார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்று நடந்தது. இதில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மாகாணசபை அமர்வு நடைபெறும் நாள்களிலும், வேறு நிகழ்வுகளுக்காக ஒதுக்கப்பட்ட நாள்களிலும் நடத்தப்படுவதால் அவற்றில் கலந்துகொள்ளாமல் வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளாமல் சிக்கல்களை எதிர் கொள்வதாக உறுப்பினர்கள் கூறினர்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலப் பகுதியில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர் ஒருவரும் இணைதலைவர்களாக இருப்பார்கள். அந்த நடைமுறை தொடர்ந்துவந்த நிலையில் இந்தஅரசின் ஆட்சிக்காலத்தில் அது மாற்றப்பட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டங்களில் இணைத்தலைவர் களாக வேறு சில அரசியல்வாதிகளும் இணைக்கப்பட்டார்கள்.

நான் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, சில அரசியல் நலன்களுக்காக இவ்வாறு செய்துள்ளீர்கள். ஆனால் பல்வேறு சிக்கல்களை நாங்கள் எதிர்கொள்ள நேரிடும் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். மேலும் இவ்வாறு பல அரசியல்வாதிகள் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருப்பதால் கூட்டத்தில் பேச வேண்டிய விடயங்களைக் கூட அவர்கள் இணைத்தலைவர் ஆசனத்திலிருந்து பேசிகொண்டிருக்கின்றார்கள்.

இதனைக் கூறியதால் என் மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. இப்போது மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான திகதிகள் ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 34 பிரதேச செயலகங்கள் மற்றும் 5 மாவட்ட செயலகங்கள் என 39 ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு நான் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

இவ்வாறான நிலை மாற்றப்படாவிட்டால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போகும். –என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம்,

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களால்உருவாகும் பிரச்சினைகளுக்கு அதிகாரிகளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஜனாதிபதியே பொறுப்பாளியாக வேண்டும். – என்றார். (ஐ-7)

# நிர்க்கதியாகியுள்ள மாவீரரின் தந்தை



கொழும்பு, மார்ச் 14
இரண்டு மாவீரர்களின் தந்தை ஒருவர் கடந்த சில தினங்களாக ஆதரவற்ற நிலையில் வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பிடம் உதவி கோரியுள்ளார்.

88வயதுடைய இந்த வயோதிபரை வயோதிபர் காப்பகத்தில்இணைப்பதற்கு நிர்வாக ரீதியான பிரச்சினைகளை அணுக வேண்டியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது என வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக அவரை ஒரு விடுதியில் வைத்துப்பராமரித்துவருவதுடன் அவருக்குத்தேவையான வற்றையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வயோதிபரை வயோதிபர் காப்பகம் ஒன்றில் இணைத்துக்கொள்வதற்கு அதிகாரிகள் முன்வந்து ஒத்துழைப்புவழங்குமாறு கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம், பொலிகண்டியைச்சேர்ந்த கிருஷ்ணபிள்ளைபொன்னையா நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து முல்லைத்தீவில் வசித்து வந்துள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது இவரது மூன்று பிள்ளைகளில் இரண்டுபேர் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து மாவீரர்களாகியுள்ளனர்.


இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்து வரும்போது அவரது மற்றைய மகனும் காணாமல் போயுள்ளார்.

இதையடுத்து மனைவியையும் பறிகொடுத்த நிலையில்வவுனியாவந்து சேர்ந்த இந்த வயோதிபர் தன்னாலான வேலைகளைச்செய்து இயலுமான வரை சீவித்து வந்துள்ள நிலையில் தற்போது மிகவும் உடல் ரீதியாகத் தளர்வடைந்த நிலையிலும் நோய் வாய்ப்பட்ட நிலையிலும் செய்வதறியாது உதவிகோரியுள்ளார்.

யாசகம்செய்ய முடியாத நிலையில்உள்ள தன்னை வயோதிபர் காப்பகம் ஒன்றில் சேர்த்து விடுமாறும் கோரியே தமிழ் விருட்சம் அமைப்பிடம் உதவி கோரியுள்ளார்.

இதையடுத்து தமிழ் விருட்சம் அமைப்பினரால் இந்த வயோதிபரைக் காப்பகத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கை இடம்பெற்றுவருவதுடன் நிர்வாக ரீதியான நடைமுறைச்சிக்கல்களை அணுகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இவ்விடயத்தில் அதிகாரிகள் முன்வந்து ஒத்துழைப்பை வழங்குவதுடன் இந்த வயோதிபரை காப்பகத்தில்சேர்த்து அவருக்கு உதவிபுரிய முன்வருமாறும் கோரியுள்ளனர்.

# கோட்டாவை இந்தியா ஆதரிக்க வேண்டும்



## என்கிறார் சுப்ரமணிய சுவாமி

கொழும்பு, மார்ச் 14
2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுவார் என்று கூறப்படுகிறது.

அவ்வாறு அவர் போட்டியிடும் பட்சத்தில், இந்தியா அவர் வெற்றி பெறுவதற்கான வழிகளைச்செய்ய வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

தமது டுவிட்டர் பதிவு ஒன்றில் அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடிப்பதற்குக் கோட்டாபயவின் பங்களிப்பு அதிக முக்கியமானது.

எனவே, அவரை வெற்றி பெறச்செய்ய வேண்டியது தேசப் பற்றுள்ள இந்தியர்களது கடமை என்றும் சுப்ரமணிய சுவாமி குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவால் முடியாதபோது, இலங்கையால் எவ்வாறு முடியும்?

## அந்நாட்டு ஊடகம் கேள்வி

கொழும்பு, மார்ச் 14
பேஸ்புக் விடயத்தில் அமெரிக்காவினால் முடியாத போது, இலங்கையால் எவ்வாறு முடியும் என்று அமெரிக்க ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

பேஸ்புக்கில் வெளியிடப்படும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் மற்றும் பொய்யான செய்திகளை நீக்க அமெரிக்காவால் முடியாதபோது, இலங்கையால் எவ்வாறு முடியும் என்று அமெரிக்க ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த காலங்களில் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் பேஸ்புக்கில் பிரசுரிக்கப்பட்டபோது அவற்றைத் தடுக்க இலங்கை அரசாங்கம் முயற்சிக்கவில்லை என்றும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற வன்முறைச்சம்பங்கள் வேறு இடங்களுக்கும் பரவாது தடுக்கும் நோக்கில் சமூக வலைத்தளங்கள் மீதான தற்காலிக தடை ஏற்படுத்தப்பட்டது.

இதனூடாக வன்முறை பரவுவதைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது என இலங்கை அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போன மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்

கொழும்பு, மார்ச் 14
வடமராட்சி கட்டடைக் காட்டுப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான தேவதாசன் யூட்அலக்சன் என்ற மீனவர் கடந்த 09 ஆம் திகதி கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் மறுநாள் 10 ஆம் திகதி அவர் பயணித்த படகு முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் கரை ஒதுங்கியிருந்தது.

இந்த நிலையில் அவரது சடலம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலையில் வடமராட்சி கட்டடைக்காட்டுக்கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

# நாட்டையும், மக்களையும் பாதுகாப்பதற்கு பலசேனாக்களோ, பலகாயக்களோ தேவையில்லை

## மல்வத்த மகாநாயக்கர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 14
நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு ஆயுதப்படைகளும், பொலிஸாரும் இருக்கும்போது, எந்தவொரு பலசேனாக்களோ பலகாயக்களோ தேவையில்லை என்று மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் வண. திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தீவிரவாத அமைப்புகள் தீவிரவாதத்தைப் பரப்புகின்றன. பகிரங்கமாகப் பணியகங்களைத் திறந்து வைத்து நாட்டின் சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துகின்றன. இவை குறித்து அரசு இன்னும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையர்கள் பொதுவாகவே குறுகிய நினைவாற்றலைக் கொண்டவர்கள். அண்மைய வன்முறைகள் கூட அவர்களால் விரைவாக மறக்கப்பட்டு விடக் கூடும்.

எனினும், 30 ஆண்டுப் போரினால் ஏற்பட்ட பின்னடைவுகளையும், கறுப்பு ஜூலை போன்ற சம்பவங்களையும் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

கண்டியில் அண்மையில் நடந்த சம்பவங்கள் நாட்டின் பெயருக்கு மாத்திரம் களங்கத்தை ஏற்படுத்தவில்லை. நாட்டின் பொருளாதாரத்திலும் கூடத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

அண்மைய வன்முறைகளுக்குக் காரணமான குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்களை அரசாங்கம் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீரற்ற காலநிலை காரணமாக மீனின் விலை சடுதியாக உயர்வு!

நிலவும் சீரற்ற காலநிலை மற்றும்கடல் கொந்தளிப்பால் அனேகமான மீனவர்கள் ஆழ் கடல் மீன்பிடியைத் தவிர்த்திருந்தனர்.

காற்றுடன் கூடிய மழை மற்றும்கடல்கொந்தளிப்பால் யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும்தீவுப்பகுதிவடமராட்சி போன்ற பிரதேசங்களில் மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடிப்பை தவிர்த்துள்ளனர்.

அதிகமானோர் கரை வலை மூலமே மீன்பிடியில்ஈடுபட்டனர். இதனால் கடலுணவின் வருகை குறைந்தும், விலை அதிகரித்தும்காணப்படுகின்றன.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாண நகருக்கு எடுத்துவரப்பட்ட கடலுணவுகளின் விலையும் அதிகரித்துக் காணப்பட்டன.

அத்துடன் பாசையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை, கல்வியங்காடுமீன் சந்தைகளில் கடலுணவுகளில் விலையும் அதிகரித்துக் காணப்பட்டன.

# தீவிரவாதிகளுக்கு ஒரு மணி நேரம் அவகாசம் கொடுத்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை!

கண்டி தீவிரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதுகாப்புத் துறையினருக்கு எதிராகப் பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்துச் சட்டநடவடிக்கை எடுக்க அரசைக் கோரியுள்ளோம் என முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இழப்பீடு வழங்குவது தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில பிரதேசங்களில் விசேட அதிரடிப் படையினர் முஸ்லிம்களைப் பலவந்தமாக வெளியேற்றியதாகவும், இதன் பின்னர் தீவிரவாதிகளினால் தாக்குதல்கள், தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேபோன்று, மற்றும் சில பகுதிகளில் தீவிரவாதிகளுக்குப் பொலிஸார் ஒரு மணி நேர அவகாசம் வழங்கியுள்ளனர்.

அந்த நேரத்தில் தாக்குதல்களை முன்னெடுக்குமாறு கூறியுள்ளதாகவும் முறைப்பாடுகள் உள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் தற்பொழுது சி.ஐ.டி. யினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விசாரணையின் பின்னர் குற்றவாளிகளுக்குப் புதிய சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படும். இதன்படி, 4 வருடங்களுக்குக் குற்றவாளிகள் பிணையின்றிச் சிறைப்படுத்தப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், அந்தப் பிராந்தியத்தின் பிரதேச செயலாளர்கள், உலமாக்கள், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# விடுவிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள், தளபாடப் பற்றாக்குறை

## மாகாண சபையில் நேற்றுக் கஜதீபன் பாய்ச்சல்

எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 14

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயம் தளர்த்தப்படவேண்டும், படையினர் வெளியேற்றப்படவேண்டும் எனக் கோஷமிட்டுப்போராட்டம் நடத்திய எங்களால், உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்து விடுவிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கவும், தளபாடங்களைப் பெற்றுக் கொடுக்கவும் இயலவில்லை. இதுவொரு வெட்கக்கேடான விடயம் மட்டு மல்ல, பாரிய குற்றமுமாகும்.



இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண் சபையின் அமர்வு நேற்றுப் பேரவைச் செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்து விடுவிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் தளபாடங்கள் இல்லாமை தொடர்பாக விசேட கவனவீர்ப்பு ஒன்றைக் கொண்டு வந்து உரையாற்றும்போதே கஜதீபன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்பாதுகாப்பு வலயங்கள் தளர்த்தப்படவேண்டும், படையினர் வெளியேற்றப்படவேண்டும், பாடசாலைகள், ஆலயங்கள் மக்களிடம் கொடுக்கப்படவேண்டும் எனத் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தியவர்கள் நாங்கள். அதன் பயனாக உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த 16 பாடசாலைகளில் 8 பாடசாலைகள் இந்த ஆட்சிக் காலத்தில் விடுவிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பாடசாலைகளுக்கு அண்மையில் சென்றிருந்தபோது 3 பாடசாலைகளில் அதிபர்கள் மட்டுமே கடமையில் உள்ளார்கள். அதில் 2பாடசாலைகளின் அதிபர்கள் வலயத்திற்கு அழைக்கப்பட்ட நிலையில், மாணவர்கள் பாடசாலையில் தாங்கள் நினைத்தாற் போல் விளையாடிக் கொண்டு நின்றார்கள்.

ஒரு பாடசாலையில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். அங்கே ஒரு பெண் வந்தார். அந்தப் பெண் தன்னை ஒரு தொண்டர் ஆசிரியர் என அடையாளப் படுத்தினார். புதிதாகத் தொண்டர் ஆசிரியர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதில்லை என நாங்கள் தீர்மானித்திருக்கும் நிலையில், எப்படிப் புதிதாகத் தொண்டர் ஆசிரியர் ஒருவர் அந்தப் பாடசாலையில் நிற்க முடியும்? ஆகமொத்தத்தில் 3 பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் எவரும் இல்லை.

விடுவிக்கப்பட்ட 8 பாடசாலைகளிலும் தளபாடங்கள் இல்லை. நாங்கள்தான் உயர்பாதுகாப்பு வலயத்தைத் தளர்த்து, படையினரே வெளியேறு எனப் போராட்டம் நடத்தியவர்கள். நாங்கள்தான் கோஷங்களைப் போட்டவர்கள். அதே நாங்கள்தான் விடுவிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு ஒரு வசதியைக் கூடச் செய்யவில்லை. இது வெட்கக்கேடான விடயம். எங்களால் செய்யக் கூடிய விடயங்களைக் கூட நாங்கள் செய்யாமல் இருப்பது பாரிய குற்றமாகும்.

வலிகாமம் வலயத்தில் பல பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களை இந்தப் பாடசாலைகளுக்கு நியமியுங்கள். அவர்கள் மாணவர்களுக்குக் கல்வியைப் போதிக்காவிட்டாலும் பரவாயில்லை. மாணவர்களுக்குப் பாதுகாப்பாக என்றாலும் இருக்கட்டும். அதேபோல் நடேஸ்வராக் கல்லூரி விடுவிக்கப்பட்டுள்ளபோதும் பாடசாலைக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றையும், பாடசாலைக் கிணற்றையும் பொலிஸார் தொடர்ந்தும் தங்கள் பயன்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

அந்த விடயம் தொடர்பாகவும் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், இந்தப் பாடசாலைகளுக்கு நேரில் விஜயம் செய்து தேவைகள் பூர்த்தி செய்யப்படும் – என்றார். (ஐ–7)

# கலவரத்தின் பின்னால் அரசின் பிரபலங்கள்!

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

கண்டி வன்முறையின் பின்னணியில் அரசில் உள்ள பிரபலங்கள் சிலர் உள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது. கொழும்பிலும் இவ்வாறான வன்முறையைத்தூண்டுவதற்கு ஒரு சில அரசியல்வாதிகள் முயற்சித்தனர். எனினும் நாம் அதனைத் தடுத்து நிறுத்தினோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தொடலங்கவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி காரியாலயத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சமூக வலைத்தளங்களில் ஊடாக நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி ஸ்திரமான பொறுப்புக்கூறலின் பிரகாரமே சமூக வலைத் தளங்களைத் திறக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)












இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.